
G.C.E. Advance Level

# பொதுத் துறைநிர்வாகம்
# சர்வதேச உறவுகள்
# மோதல் மோதல் முகாமைத்துவம்




## V.K SELVA

Forme Lecture College of Degree Studies Jaffna

Higher Studies Jaffna

KL/Kalutara Muslim Central College
Kalutara

R.Rencino

# ஆசிரியர் உரை

அரசறிவியல் என்ற நூலில் புதிய பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள பொதுத்துறை நிர்வாகம், சர்வதேச அரசியல், மோதல் மோதல் தீர்த்தல் ஆகிய மூன்று விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டு இந்நூலை எழுதி வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைவதுடன், இறைவனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

2009 ஆம் ஆண்டிலிருந்து G.C.E A/L மாணவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்கு அமைய புதிய விடயங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் இந்நூலைக் கற்கின்ற மாணவர்களுக்கும் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் பிரயோசனமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் ஒரு சிறப்பு பாடமாக கற்கக் கூடிய வாய்ப்பு கிடைத்ததுடன் எனது கல்வியின் முன்னேற்றத்திற்கு ஊக்கமும், ஆக்கமும் தந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான மதிப்பிற்குரிய அமரர், பேராசிரியர் அம்பலவானர் சிவராசா, திருவாளர் M.L.A. காதர் (M.A), திருவாளர் M.P.M. சைபுதீன் (M.A) ஆகியோரிடம் கல்விகற்ற வாய்ப்புக் கிடைத்ததையிட்டும் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலை எழுதுவதற்கு 2010 ஆம் ஆண்டிற்கான பாடத்திட்ட செயலமர்வு ஒன்றில் தேசிய கல்வி நிறுவன வழிகாட்டலின் கீழ் பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளரான எனது மதிப்பிற்குரிய ஆசான் M.P.M. சைபுதீன் அவர்களினால் நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையின் கலந்து கொண்டு பெற்ற அறிவின் பின்புலத்தில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது மேலும் தேசிய கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆசிரியர் அறிவுரை வழிகாட்டியும் இந்நூலை எழுதுவதற்கு உதவியாக இருந்துள்ளது. இந்நூலை அச்சிட்டு வெளியிட்ட கொழும்பு வணிகவள நிலையத்துக்கு எனது நன்றிகள்.

நன்றி

**V.K. Selva**
**P.U.C Institute**
**Colombo - 06**
**T.P : 077 4940523**

# பொருளடக்கம்

பொதுத்துறை நிர்வாகம்

முகாமைத்துவம்

சர்வதேச அரசியல்

கூட்டுப்பாதுகாப்பு


மோதல் தீர்த்தல் மோதல் முகாமைத்துவம்

# பொதுத்துறை நிர்வாகம்
# [Public Administration]

இன்றைய உலகில் வளர்ந்து வருகின்ற கற்கை நெறிகளில் பொதுத்துறை நிர்வாகம் என்பது ஒரு முக்கியமான கற்கைநெறியாகக் காணப்படுகின்றது. நவீன அரசியல் சமூகவாழ்க்கையில் பொதுத்துறை நிர்வாகம் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. ஒரு நாட்டினுடைய வளர்ச்சி நிர்வாகத்தின் கரங்களிலேயே தங்கியுள்ளது. இதனால் இன்றைய அரசுகளை **"நிர்வாக அரசு"** என்று கூறுமளவிற்கு இன்றைய பொதுத்துறை நிரவாகம் வளர்ச்சியடைந்துள்ளது.

## பொதுத்துறை நிர்வாகம் என்பதன் பொருள் விளக்கம்

பொதுத்துறை நிர்வாகம் என்பதற்கு ஒரு நிலையான உறுதியான வரைவிலக்கணம் காணப்படவில்லை. மனித நாகரீக வளர்ச்சி, மனித தேவைகளின் வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் பொதுநிர்வாகம் வளர்ச்சி அடைந்து செல்வதனைக் காணலாம். இதனால் பொதுத்துறை நிர்வாகம் என்பது அரசாங்கத்தின் நான்காவது கரம் என அழைக்கப்படுகின்றது.




## வரைவிலக்கணம்

பொதுத்துறை நிர்வாகம் என்றால் என்ன என்பதற்கு பின்வரும் வரைவிலக்கணங்களைக் குறிப்பிடலாம். குறிப்பாக **"அரசாங்கத்தின் நடவடிக்கைகளுடன் ஈடுபாடு கொண்டுள்ளதே பொதுத்துறை நிர்வாகம்"** எனக் குறிப்பிடலாம். அரசாங்கம் தீர்மானிக்கும் பொதுக் கொள்கைகளை அடைவதற்காக செயற்படும் மொத்த செயல்முறையே பொதுத்துறை நிர்வாகம் என L.D. White குறிப்பிடுகின்றார். மேலும்

வூட்றோ வில்சனின் (**Woodrow Wilson**) கருத்துப்படி "அரச சட்டங்களை முறையாகவும், விரிவாகவும் நடைமுறைப்படுத்துவதே பொதுத்துறை நிர்வாகம் ஆகும்" எனக் குறிப்பிட்டார். மேற்கூறிய வரைவிலக்கணங்களின் மூலம் பொதுக்கொள்கையையும் அதன் அமுலாக்கத்தினையும் ஆராய்வதே பொதுநிர்வாகம் எனக் கூறலாம்.

பேராசியரியர் விக் (Vieg) இது பற்றிக் கூறும்போது "இது திட்டமிட்ட முயற்சியாகும். பொதுநலனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களையும் மூலவளங்களையும் திட்டமிட்டுப் பயன்படுத்தும் செயன்முறையாகும்" என்றார்.

E.N. கிளாடின் (E.N. Gladden) அரசாங்கத்தின் நடவடிக்கையுடன் தொடர்புபட்டதே பொதுநிர்வாகம் எனக் குறிப்பிட்டார். **ஜே.எஸ்.ஹட்சன் (J.S.Hatgson)** என்பவர் பொதுநிர்வாகம் என்பது தனிமனிதனுடைய அல்லது அரசாங்க குழுக்களுக்களுக்குடையே அல்லது அதன் பகுதிகளுக்குடைய எல்லாச் செயற்பாடுகளுமாகும். **H சைமன் (H. Simon)** "பொது இலக்கினை" நிறைவேற்றுவதற்கான குழுக்களின் கூட்டுறவான செயற்பாடே 'பொது நிர்வாகம்' என்கிறார். **(H.Walker)** என்பவர் அரசாங்கத்தின் சட்டத்திற்கு பெறுமானத்தினைக் கொடுப்பதால் அது நிர்வாகம் என அழைக்கப்படுகின்றது என்கின்றார். "அரசாங்கத்தின் பொதுக்கொள்கை வலிமையும் சிறப்பும் பெற்றதாகவிருப்பினும் அவை சிறந்த முறையில் செயற்படுத்தப்படவில்லையெனின் அதனால் எவ்வித பயனுமில்லை. எனவே அரசாங்கத்தின் பொதுக்கொள்கையை அமுல்படுத்தும் பொதுநிர்வாகத்துறை விரைவாகவும் செயல்திறனுடனும் நேர்மையாகவும் செயற்படவேண்டும்.

மேலும் "பொதுமக்களின் நலன்களுக்காக சட்ட மன்றம் இயற்றிய சட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிர்வாகத்துறை மேற்கொள்ளும் எல்லாச் செயல்களும் பொதுத் துறை நிர்வாகமாகும்". அத்தோடு பொதுத்துறை நிர்வாகம் சட்டத்தை முறையாகவும் ஒழுங்காகவும் நிறைவேற்றுவதாகும்.

"பொதுக்கொள்கையில் நிறைவேற்றும் அல்லது செயலாக்கத்திற்கான எப்போதும் எவ்வாதிகார வரம்பிலும் நிலவுகின்ற சட்டங்கள், ஒழுங்குமுறைகள், உறவுகள், தொகுப்புகள், பழக்கவழக்கங்கள் போன்றவைகளின் கூட்டாக்கமே பொதுத்துறை

நிர்வாகம் ஆகும். ஒரு அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட இருக்கும் பணிகளை எவ்வாறு நிறைவேற்றி வைக்கவேண்டும் என்ற அறிவையும் ஆற்றலையும் கொண்ட பணியாள் தொகுதியைக் கொண்டுள்ளதே பொதுத்துறை நிர்வாகம் எனப்படும்".

மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவுசெய்யும் நோக்கில் அரசாங்கம் உருவாக்கும் கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொதுநிர்வாகத்திற்குரியது. பொதுநிர்வாகம் என்பது திட்டமிட்ட இலக்கினை அடைவதற்கான அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளையும் குறித்து நிற்கும். அதாவது அரசாங்க நிறுவனங்களாகிய சட்ட, நிர்வாக நீதித்துறைகளின் கூட்டுச் செயற்பாடுகளே பொதுநிர்வாகமாகும்.

- அரச துறை வசமுள்ள வளங்களை சிக்கனமாகவும் இலாபகரமான வகையிலும் பயன்படுத்திச் செயற்படுத்தல் வேண்டும். எனவே அது அரசின் தொழில் அந்தமும் ஆகும்.

- பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதை முறைப்படுத்து வதையும் நோக்காகக் கொண்ட எல்லாப் பணிகளையும் பொது நிர்வாகம் உள்ளடக்கியுள்ளது.

- நிர்வாக ஒழுங்கமைப்புச் செயன்முறையை நடத்திச் செல்வதற்காக பணிக்குழுவாட்சி (பணித்துறையாட்சி) எனும் ஒழுங்கு முறைமை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மக்ஸ் வெபர் (Max Weber) எனும் சமூகவியலாளர் இது தொடர்பான ஒரு கோட்பாட்டை முன்வைத்துள்ளார்.

## பொதுநிர்வாகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

பொதுத்துறை நிர்வாகத்தின் தோற்றம்பற்றிப் பார்க்கும்போது அரசு என்கின்ற அமைப்பு தோன்றிய காலந்தொட்டே அரச நிர்வாகிகளும் பொதுத்துறை நிர்வாகங்களும் தோற்றம்பெற்றுவிட்டன என்று குறிப்பிடலாம். பொதுத்துறை நிர்வாகம் என்ற சொல் Administration என்ற ஆங்கிலத்தின் பதமானது உண்மையில் Ad-Ministre என்ற இலத்தின் சொல்லிலிருந்தே தோற்றம் பெற்றது. இதன்

அடிப்படைக் கருத்து **"மக்களுக்கு சேவை செய்தல்"** என்பதாகும். இதனடிப்படையிலே பொதுத்துறை நிர்வாகம் என்பது வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

பொதுத்துறை நிர்வாகம் என்பது உரோமனியர்கள் வளர்ச்சி பெறாத காலகட்டத்திற்கு முற்பட்ட காலத்திலேயே எகிப்தும், கீழைத்தேச நாடுகளும் ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்த அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட தொகுதியைப் பெற்று அவற்றின் மூலம் பண்பாட்டு நாகரீகச் செய்திகளை மேற்கொண்டன. எனினும் உரோமானியப் பேரரசே முதன் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட ஆட்சிமுறையின் சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்தது. இக்காலகட்டத்தில் சட்டதிட்டம் அமைதியான வாழ்வு, கொள்கைத் திட்டங்களை முன்னெடுக்க நிர்வாகம் பின்பற்றப்பட்டது. இக்காலகட்டத்தில் நிர்வாகம் பற்றிய பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கிரேக்க காலகட்டத்தில் அரசியல்வாதிகளைப் போற்றுவதிலும், உற்பத்தி முயற்சிகளிலுமே அக்கறை காட்டினர். இக்காலகட்டத்தில் சிறந்த நிர்வாகிகளை உருவாக்குவதில் அக்கறைகாட்டவில்லை. எனினும் மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

மானியமுறை மற்றும் மன்னராட்சி காலத்தில் மானிய முறையின் கீழ் மன்னனுக்கு சேவையாற்ற பிரபுக்கள் மற்றும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இக்காலகட்டத்தில் அரசியல் மற்றும் திருச்சபைகளுக்கிடையிலான போட்டிகள் காரணமாக நிர்வாகம் பெரிதாக வளர்ச்சியடையவில்லை.

மறுமலர்ச்சிக்காலத்தில் ஐரோப்பாவில் உருவான சமூக, பொருளாதார மாற்றம் ஏற்பட்டது. நாடுகாண் பயணங்கள் மற்றும் புதிய அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சியினால் அரசியல் செயற்பாடு, வணிகம், நிதி, அரசியல் போன்றவற்றைப் பலப்படுத்த பொதுத்துறை நிர்வாகம் வளர்ச்சியடைந்தது.

17ம், 18ம் நூற்றாண்டுகளில் அரச குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்கம் படிப்படியாக பொதுத்துறை நிர்வாகமாக

வளர்ச்சியடைந்தது. இதனால் இப்பொதுத்துறை நிர்வாகம் மக்களுக்கு பொறுப்புச்சொல்கின்ற ஒரு துறையாக வளர்ச்சியடைந்தது.

நவீன காலத்தில் பொதுநிர்வாகவியல் என்ற பதம் 18ம் நூற்றாண்டின் இறுதியில் ஐக்கிய அமெரிக்காவில் முதன்மைப்படுத்தப்பட்டது. 1887 ஆம் ஆண்டு வூட்றோ வில்சன் தனது கட்டுரையில் பொதுநிர்வாகவியல் தொடர்பான தெளிவான எண்ணக்கருவினை உருவாக்கினார். அரசாங்கம் என்ற அமைப்பினுள் நிர்வாகம் ஒரு தனியான அலகு என்பதே வூட்றோ வில்சனின் கருத்தாகும். இவர் பொதுநிர்வாகவியலின் தந்தை என அழைக்கப்படுகிறார். இவரைத் தொடர்ந்து பிராங் குட்நோ (Frank Goodnow) பொதுநிர்வாகவியலின் வளர்ச்சிக்குப் பங்களிப்பாற்றினார். 1883 ஆம் ஆண்டு **ஒப்பீட்டு நிர்வாகச் சட்டம்** என்ற நூலை எழுதியிருந்தார். இந்நூல் பொதுநிர்வாகம் தொடர்பாக எழுதப்பட்ட **முதல் நூலாகும்.** 1926 ஆம் ஆண்டு தொடக்கம் பொதுநிர்வாகவியல் தனியான ஒரு கல்வித்துறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு கலாநிதி வைற் எழுதிய *Introduction to the study of Administration* என்ற நூல் உதவியிருந்தது. இவரைத் தொடர்ந்து பேராசிரியர் வில்லோபி, 1930 களில் மூனி, லூதர் குல்லிக் போன்றோர் பொதுநிர்வாகம் தொடர்பாக பல நூல்களை வெளியிட்டனர். இக்காலகட்டத்தில் பொதுநிர்வாகவியல் கற்கைநெறி பல்கலைக் கழகங்களில் போதிக்கப்பட்டு வந்தது. அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தனித்துவமான ஒரு கற்கைநெறியாக இது வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இன்று இப்பொதுத்துறை நிர்வாகமானது அரசாங்கத்தின் நான்காவது கரமாகவும், ஒரு அரசின் வெற்றிக்கு இன்றியமையாத சாதனமாகவும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

## பொதுநிர்வாகத்தின் அடிப்படை அம்சங்கள்

பொதுத்துறை நிர்வாகமானது அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவுசெய்கின்ற அடிப்படைத் தாபனங்களுள் ஒன்றாகும். குறிப்பாக அரசாங்கத்தின் கொள்கைகளையும் தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தும் பிரதான பணிகளை மேற்கொள்கின்றது எனலாம். குறிப்பாக பொதுநிர்வாகமானது பின்வரும் அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. திட்டமிடல்
2. ஒழுங்குபடுத்தல்
3. கட்டுப்படுத்தல்
4. அமுலாக்குதல்
5. இணைத்து வைத்தல்
6. கொண்டு நடாத்துதல்

அத்தோடு P. Mcqueen என்பவர் Principle of Public Administration என்ற நூலில் பொதுநிர்வாகத்தின் அடிப்படை அம்சங்களாகக் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார். அவையாவன,

1. பொதுநிர்வாகச் செயற்பாடுகள்
   அதாவது கருமங்களை வேறுபடுத்தல், கொண்டு நடத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கியது.
2. நிர்வாக அமைப்புகளைத் தாபித்தல்
3. ஆளணி முகாமைத்துவம்
4. பொருள் மற்றும் நிரம்பல் பணிகள்

இவற்றினைவிட பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்கள் தொடர்பகக் கருத்துத் தெரிவித்த லூதர் குலிக் Luthar Gullick என்பவர் POSDCORB பற்றிய எண்ணக்கருவில் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பல்வேறு காலகட்டத்தின் அடிப்படையில் பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்களாக விளக்கப்படுகின்றது எனினும் இன்றைய காலகட்டத்தில் பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்களாக நாம் பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

1. ஆராய்தல்
2. முன்கூட்டியே உணரும் தன்மை
3. திட்டமிடுதல்
4. நெகிழும் தன்மை
5. தேவையான உத்தியோகத்தர்களும் மூலப்பொருட்களும்
6. சிறந்த அமைப்பு
7. அரசியல் கண்காணிப்பு
8. பொதுமக்களுக்கு பொறுப்பு சொல்லல்

9. சமூக அடிப்படைத் தேவைகள்
10. திறமைக் கொள்கை பொதுமக்கள் தொடர்பு
11. நவீன முறைகள்

## பொதுத்துறை நிர்வாகத்தின் முக்கியத்துவம்

ஓர் அரசு சிறப்பாக இயங்குவதற்கும் நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அரசின் நோக்கங்களையும், இலக்குகளையும் முன்னெடுத்துச் செல்லவும் பொதுநிர்வாகம் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

1. ஒரு நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கு பொதுநிர்வாகம் அவசியம்.
2. சிறப்பான அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட சமூகத்தினைக் கட்டியெழுப்ப பொதுநிர்வாகம் அவசியம்.
3. சிறப்பான தலைமைத்துவத்துடன் மக்களின் தேவைகளை நிறைவுசெய்து நாட்டினைக் கட்டியெழுப்ப பொதுநிர்வாகம் அவசியமாகும்.
4. பொதுநிர்வாகம் இன்றி அரசாங்க நிர்வாகப் பொறிமுறை இயங்க முடியாது.
5. சட்டங்களையும் கொள்கைத் திட்டங்களையும் தமது அறிவுக்கேற்ப நடைமுறைப்படுத்துவதற்கு பொதுநிர்வாகம் அவசியம்.
6. நாட்டின் ஆட்சித்துறை மாறியபோதும் இப் பொதுநிர்வாகமும் நிரந்தர நிர்வாகிகளும் மாறாமல் நிரந்தர தன்மையினைக் கொண்டு செயற்படுகின்றவர்கள்.
7. நிர்வாகப் பணிகள் பல்கிப்பெருகியுள்ள இக்காலகட்டத்தில் பொதுநிர்வாகம் இன்றி அரசு செயற்படமுடியாது.

## பொதுக்கொள்கை / அரச கொள்கை

அரசியலிலும் சரி ஆட்சியிலும் சரி மனித வாழ்வில் அடிக்கடி பயன்படுத்துகின்ற சொல் **பொதுக்கொள்கை** ஆகும். இப் பொதுக் கொள்கையானது சகல மக்களுக்குமாக இயற்றப்படுகின்ற கொள்கை யாகும். அரசு தோற்றம் பெற்றபொழுதே பொதுக்கொள்கையும் தோற்றம் பெற்றது. அரசின் இயக்கத்திற்கு கொள்கை அவசியம்.

இப் பொதுக்கொள்கையானது அரசாங்கத்தின் வழிகாட்டியாகவும் பொதுநிர்வாகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றது.

இப் பொதுக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டினையும் அந்நாட்டின் அரசியல் கொள்கைகளையும் அறிந்து கொள்ளலாம். பொதுக்கொள்கையானது **"ஒரு அரசாங்கத்தின் உற்பத்தியாகும்"** எனக் குறிப்பிடலாம். இது பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. நோக்கமும், இலக்குகளை வெளியிடல்
2. செயற்பாட்டு முறையொன்றினை வெளியிடல்
3. சமூக பெறுமதியின் அளவினை வெளியிடல்
4. பொதுக்கொள்கைகள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவை நீதிமன்ற அவதானிப்புக்கு அமைவாக கட்டியெழுப்பப்பட்டவை.
5. பொது நன்மை அளித்தலை நோக்காகக் கொண்ட பொதுக் கொள்கைகள் பொதுமக்களின் தேவைகளுக்கு அமைவாக வேண்டும்.

**பொதுக் கொள்கைக்கும் பொதுநிர்வாகத்திற்கும் இடையில்** நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. பொதுத்துறை நிர்வாகத்தின் செயற்பாட்டுக்கு பொதுக்கொள்கை அத்தியவசியமானதாகும். பொதுவாக பொதுக்கொள்கையானது,

1. விசேட முன்மொழிவைக் கொண்டது.
2. அரசாங்கத்தின் தீர்மானங்கள்
3. அரசாங்கத்தின் வெளியீடு
4. விளைவுகள்

## அரசகொள்கைக்கும் நிர்வாகத்திற்குமிடையில் உள்ள தொடர்பு

அரச கொள்கைக்கும் நிர்வாகத்திற்குமிடையில் எவ்வாறான தொடர்புகள் காணப்படுகின்றன என்பதை பின்வருமாறு நோக்கலாம்.

1. அரச கொள்கையினை நடைமுறைப்படுத்துகின்ற பகுதியே

நிர்வாகமாகும்.

2. சில சந்தர்ப்பங்களில் நிர்வாகமே கொள்கைகளை உருவாக்கும்.
3. நிர்வாகத்தின் இறுதி இலக்கு அரசின் நோக்கங்களை நிறைவேற்றுவ தாகும்.
4. அரசாங்கத்தின் கொள்கை வெற்றியும், தோல்வியும் நிர்வாகத்தின் கையிலேயே தங்கியுள்ளது.
5. பொதுக் கொள்கையினை உருவாக்குதல், அமுல்படுத்தல், மதிப்பிடல், மேற்பார்வை செய்தல், முகாமை செய்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்கின்ற பிரதான பகுதி நிர்வாகம் ஆகும்.
6. நிர்வாகம் இயங்குவதற்கு கொள்கை அவசியம்.
7. வினைத்திறனான நிர்வாகத்திற்கு சிறந்த கொள்கை அவசியம்
8. நாட்டு மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்ய இரண்டு நிறுவனங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையது.

## அரச பொதுக்கொள்கை பற்றிய வரைவிலக்கணம்

பொதுக்கொள்கை தொடர்பாக பல அறிஞர்கள் காலத் தேவைக்கேற்ப தமது கருத்துக்களைத் முன்வைத்துள்ளனர்.

Birkland என்பவர் பொதுக்கொள்கையானது "அரசாங்கத்தினால் உருவாக்கப்படுகின்றது. அரசாங்கம் தான் எதனைச் செய்ய விரும்புகின்றது என்பதனை விளக்குவதே" பொதுக்கொள்கையாகும்.

Thomes dye என்பவருடைய "கருத்தின்படி அரசாங்கத்தின் மூலம் நாம் செய்யக்கூடியது எது, செய்யக்கூடாதது எது என்பவற்றுடன் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எத்தகைய தீர்மானங்களும் அரச கொள்கையாகும்" எனக் குறிப்பிட்டார். மேலும் பொதுக்கொள்கை ஒரு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்? எதனை? எவ்வாறு? எப்படிச் செய்ய வேண்டும்? என்பது தொடர்பான அம்சமே பொதுக்கொள்கை ஆகும். பொதுக்கொள்கை இல்லாமல் அரசாங்கமோ நிர்வாகமோ இயங்க முடியாது. இக்கொள்கையானது பொதுவானதாகவோ, பரந்ததாகவோ, குறுகியதாகவோ, விரிந்ததாகவோ, எழுதப்பட்டதாகவோ, எழுதப்படாத தாகவோ இருக்கலாம். ஆகவே **சமூக இலக்குகளை அடைவதற்கான**

நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கான அரசியல் தீர்மானங்களே பொதுக் கொள்கையாகும்.

- "Robert Salisbury" அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் அதிகாரத் தீர்மானமே பொதுக்கொள்கை எனக் கூறுகின்றார்.

இதிலிருந்து

- பொதுக்கொள்கை என்பது இலக்குகளுக்கூடான செயற்பாடுகளைக் குறிக்கின்றது.
- அரசாங்க அலுவல்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாட்டிற்கான வழிமுறையாகும்.
- அரசாங்கம் எதனைச் செய்யலாம், எதனைச் செய்யக்கூடாது என்பதனைக் கூறுகின்றது.

### பொதுக்கொள்கையின் பாட எல்லை

1. தேசத்தைக் கட்டியெழுப்புதல்.
2. சமூக பொருளாதாரப் பிரச்சினைகள்.
3. சமாதானத்தினைப் பாதுகாத்தல்.
4. பிணக்குகளைத் தீர்த்தல்.
5. பொருட்கள், சேவைகளை வழங்குதல்.
6. தேசிய அபிவிருத்தி.

### அரச கொள்கை வகுத்தலின் பிரதான நிலைகள்

பொதுக்கொள்கையில் கொள்கை முனைப்பு, கொள்கை உருவாக்கம், கொள்கை நடைமுறைப்படுத்தல் அல்லது அமுலாக்கல், கொள்கை மதிப்பிடல் அல்லது பகுப்பாய்வு செய்தல் என்பன முக்கியமானவையாகும்.

★ **கொள்கை முனைப்பு (Policy Initiation)**

இங்கு முன்னுரிமை அடிப்படையில் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை வியாக்கியானஞ் செய்தல், ஒழுங்குபடுத்தல் போன்ற பணிகளைச் செய்து, கொள்கை நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். இங்கு மாற்றுக்கொள்கைகள் இனங்காணப்படும்.

★ **கொள்கை உருவாக்கம் (Policy Formulation)**

மேலே இனங்கண்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்றுக் கொள்கைகளுள் மிகச்சிறந்த மாற்றத்தைத் தெரிவுசெய்துகொள்வது

இச்சந்தர்ப்பத்தில் நிகழும். இந்த தெரிவுசெய்யப்பட்ட கொள்கையை திட்டமிடுதல், அதனை நடைமுறைப்படுத்தும் விதத்தையும் ஒழுங்கையும் உள்ளடக்கி கொள்கை வகுத்தல் செய்யப்படும் சந்தர்ப்பம் இதுவாகும். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மிக முக்கியமான இடத்தினைப் பெறுவர். பக்கச்சார்பற்ற சிவில் உத்தியோகத்தர்களும் இதில் அடங்குவார்கள். அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வித்தியாசமான சிவில் சேவை அமைப்பு காணப்படும். கொள்கையினை உருவாக்குகின்றபோது பின்வரும் அம்சங்கள் மிகவும் முக்கியமானது.

**(அ) உள்ளகத் தகவல் முறை**

கொள்கை உருவாக்கத்திற்கு உள்ளக தகவல்முறை மிகவும் முக்கியமானது. உள்ளக தகவல்முறை என்பது அரச திணைக்களங்களில் காணப்படும் அறிக்கைகள், மதிப்பீடு, வருமானச் சான்றிதழ் போன்றவற்றைக் கணக்கிலெடுத்து நிர்வாக உறுப்பினர்கள் தமது தேவைகளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்கின்றனர்.

**(ஆ) வெளியகத் தகவல் முறை**

பொதுக்கொள்கையினை உருவாக்கின்றபோது உள்ளக தகவல் முறையினைவிட வெளியகத் தகவல்முறையினையும் பயன்படுத்து கின்றனர். வெளியகத் தகவல் முறையென்பது உள்ளகத் தகவல் முறையில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் பயன்படுத்துகின்றனர். இதன் அடிப்படையில் பொதுக்கொள்கையினை உருவாக்க வருகின்றபோது தகவல் சேகரிப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

கொள்கை அமுலாக்கத்தின் அடிப்படைகளை வரையறை செய்யும்போது J.M. Gladen என்பவர் பின்வருமாறு வரையறை செய்கின்றார். அவையாவன,

1. பாராளுமன்றமானது - அரசியல் மற்றும் பொதுவான கொள்கைகளை உருவாக்குகின்றது.
2. மந்திரிசபையானது நிறைவேற்றுக் கொள்கையை உருவாக்குகின்றது.
3. அரசாங்க நிர்வாகிகள் நிறைவேற்றுக் கொள்கையை உருவாக்குகின்றது.

★ **கொள்கை நடமுறைப்படுத்தல் (Policy Implementation)**

இச்சந்தர்ப்பத்தில் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும். இது நிருவாகப் பணியாகும். பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலானது பொதுநிருவாகத்தினால் மாத்திரம் தனியாகச் செய்யக்கூடிய ஒன்றல்ல என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தனியார்துறை, அரசசார்பற்ற நிறுவனங்கள் (தொண்டர் அமைப்புக்கள்) கணிசமான பங்கை வகிக்கின்றன. அவற்றுடன் கூட்டாகச் செயற்பாட்டை உருவாக்க வேண்டும்.

★ **கொள்கைகளை மதிப்பிடல் (Policy Evaluation)**

கொள்கை மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பெற்றுள்ளதா என்பதை மதிப்பிடுவது இச்சந்தர்ப்பத்தில் நிகழும். கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல், இதனை மீண்டும் தயாரித்தல், கொள்கையை முடிவுறுத்தல் என்பன மதிப்பீட்டின் இறுதியில் நிகழும். நடைமுறைப்படுத்தும் அனுபவங்களை மதிப்பிடுதலும் பின்னூட்டல் செயன்முறையும் இதில் அடங்கும்.

கொள்கைகளை இனங்காணும்போது ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு முக்கிமானது. அந்தவகையில் அரசாங்கத்தின் திட்டங்கள், கொள்கைகள் போன்றவை இவ் அரசியல் அமைப்பினூடாகவே அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும் ஒரு நாட்டின் மந்திரிசபை எவ்வளவு சிறப்பும், ஆற்றலும் கொண்டதாக அமைந்துள்ளதோ அதற்கேற்ப கொள்கைகளை அமுலாக்கம் செய்யப்படுவதில் சிறப்பாகச் செய்யப்படும். மேலும் திட்டமிடல் ஆணைக்குழு அரசுக்குத் தேவையான ஆட்களையும், மூல வளங்களையும் திட்டமிட்டு ஒருங்கிணைக்கும் பணியினையும் மேற்கொள்கின்றது. இதனூடாகவே நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அவசியமான கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன.

பொதுக்கொள்கைகளை உருவாக்க வருகின்றபோது பின்வரும் அம்சங்கள் மிக முக்கியமானதாகும்.


1. பிரச்சினைகளின் நிலமை
2. கொள்கையின் இலக்கும் நோக்கும்

3. இலக்குகளை அடைவதற்கான கட்டமைப்புக்கள்
4. வளத்தின் நிலமை

பொதுக்கொள்கையினை உருவாக்குகின்றபோது சிவில் சமூகத்துடன் இணைந்து செயற்படுதல் சிறப்பானதாகும்.




பொது இலக்கிற்கேற்ப நிர்வாக முகாமைத்துவமானது தனது செயற்பாட்டக்கான கொள்கையை வகுக்கும்போது பொதுக்கொள்கை உருவாக்கம் நிகழ்கின்றது. பொருள், இடம், காலம் என்பவற்றினைக் கருத்தில் எடுத்து பொதுக்கொள்கையை தெளிவாக உருவாக்குவதன் மூலம் எப்படி, எங்கு, எப்பொழுது, எவற்றின் மூலம் செய்யப்படுகிறது என்பதனைத் தீர்மானிக்க முடியும். பொதுக்கொள்கையை நடைமுறைப் படுத்துவது பொது நிர்வாகமாகும்.



பொதுவாக இன்றைய அறிவுமய நூற்றாண்டில் பொதுக் கொள்கையினை அரசாங்கங்கள் உருவாக்குகின்றபோது கொள்கை வட்டத்தினை பயன்படுத்தியே கொள்கை உருவாக்கத்தில் ஈடுபடுகின்றனர். இதனடிப்படையில் கொள்ளை ஒன்றினை உருவாக்குகின்றபோது முதலாவதாக பிரச்சினையினை அடையாளம் காணல் முக்கியமானதாகும். பிரச்சினை எதுவுமின்றி கொள்கை உருவாக்கப்படலாகாது. காரணம் பொதுக்கொள்கை என்பது பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதாக அமைய வேண்டும். இரண்டாவதாக பிரச்சினையை வரையறுத்தல் முக்கிமானது. குறிப்பாக குறிப்பிட்ட பிரச்சினையானது சமூக ரீதியானதா, அரசியல் ரீதியானதா, பொருளாதார ரீதியானதா என வரையறுத்துக்கொள்ள வேண்டும். அடுத்த அம்சமாக பிரச்சினைக்கு தீர்வு காணும்முகமாக மாற்றுவழி முறைகளினை இனங்காணுதல். இதனடிப்படையில் மாற்றுவழிமுறைகளிலிருந்து சிறந்த ஒன்றினைத் தெரிவுசெய்து மதிப்பிட வேண்டும். அத்தோடு அதனை அமுல்படுத்தி இறுதியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு கொள்கைவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற கொள்கைகள் சிறப்பானதாக அமையுமென பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

## அரசகொள்கை வகுத்தலில் ஈடுபடும் நிறுவனங்கள்

இன்றைய உலகில் பொதுக்கொள்கையினை வகுத்தலின்போது பல்வேறு நிறுவனங்கள் ஈடுபடுகின்றனர். குறிப்பாக அரசின் தலைவர்கள், மற்றும் பராளுமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் என்போர் முக்கியமானவர்கள். எனினும், இன்றைய நடைமுறையில் பின்வரும் நிறுவனங்கள் கொள்கை உருவாக்கப் பணிகளில் ஈடுபடுகின்றன. அவையாவன,

- அரசியல்வாதிகள்
- அரசாங்கம்
- சிவில் சமூகம்
- சர்வதேச சூழல் (UNO.SAARC.EU)
- ஊடகம்
- நலன்பேண் குழுக்கள்

- வர்த்தக சங்கங்கள்
- அரசசார்பற்ற நிறுவனங்கள்

**கொள்கை உருவாக்குவோரை இனங்காணல்**

பொதுக்கொள்கயினை உருவாக்குகின்றபோது பல்வேறு நபர்கள் ஈடுபடுகின்றனர். சுருக்கமாக பின்வருமாறு குறிப்பிடலாம்.

- பணியகமைப்பாளர்கள்
- அரசின் தலைவர்கள்
- உயர்குழாம்
- அரசியல் கட்சிகள்
- அரசியல் தலைவர்கள்
- பொதுமக்கள்
- ஊடகம்
- நிர்வாகிகள்
- புலமையாளர்கள்
- சிவில் சமூகம்

## முகாமைத்துவம்

நிர்வாக அமைப்பினை வினைத்திறனுடன் செயற்படவைத்து பொதுக்கொள்கையினை நடைமுறைப்படுத்த முற்படும் செயற்பாடே நிர்வாக முகாமைத்துவம் ஆகும்.

பொதுக் கொள்கையினுடைய இறுதி இலக்கு கொள்கை முகாமைத்துவமாகும். இதனடிப்படையில் Fudge என்பவர் கொள்கையினுடைய முகாமைத்துவ மூலத்துவங்களாக பின்வருவனவற்றினை அடையாளப் படுத்துகின்றார்.

- எதனைச் செய்ய வேண்டும் என அறிந்திருத்தல்.
- தேவையான வளங்கள் கிடைக்கப்பெறுதல்.
- வளங்களைக் கட்டுப்படுத்தி வேலை வாங்குதல்.
- தொடர்ந்து பணியாற்றும் வகையில் முதலில் இருந்தவர் தாம் பெற்ற அறிவினைப் பிறருக்கு அழித்தல்.

இதனைவிட மிகக் குறைந்த கொள்கை முகாமைத்துவமானது போதுமான மூலதனம், மனிதவளங்கள் என்பன மிக முக்கியமானதாகும். இவற்றை அடைவதற்காக பின்வரும் இரண்டு அம்சங்கள் கொள்கை அமுலாக்கத்தில் அடிப்படையாகின்றன. அவையாவன,

1. திட்டமிட்ட இலக்கினை அடைவதற்கான நிர்வாக ஆற்றல்.
2. அரசியல் நிதித்துறை சார்ந்த ஆதரவு

மேலும் பொதுக்கொள்கை முகாமைத்துவமானது உருவாக்கப்பட்ட பொதுக்கொள்கையினை மேற்பார்வை செய்தல் ஓர் அரசாங்கத்தின் சிறப்பான வெற்றிக்கும், தோல்விக்கும் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. பொதுவாக கொள்கை முகாமைத்துவத்தின் அடிப்படைகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம். அவையாவன,

1. நிதியைப் பகிர்ந்தளித்தல்
2. கடன்களை உருவாக்குதல்
3. நன்கொடைகளைச் வழங்குதல்
4. ஒப்பந்தங்களை உருவாக்குதல்
5. தரவுகளைச் சேகரித்தல்
6. பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்தல்.
7. நிறுவன அலகுகளை உருவாக்குதல்.
8. மாற்றுவழிகளை முன்வைத்தல்.
9. எதிர்காலத்திற்காகத் திட்டமிடுதல்.

முகாமைத்துவம் தொடர்பாக முதன் முதலில் ஆராய்ந்த பெட்ரிக் டேலர் என்பவரின் கருத்துப்படி பயனுறுதி, வினைத்திறன், பகுத்தறிவு, இலாபம் ஆகிய பெறுமானங்களை உச்சமாக்கும் மிகச் சிறந்த முறையை விஞ்ஞானச் சோதனை மூலம் கண்டறிதல் வேண்டும். அதற்கமைய வேலைசெய்யும் உண்மை விஞ்ஞானத்தைக் கண்டறிந்த பின்னர், மிகச்சிறந்த பணியணியினரைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டும். மேம்படுத்தல் வேண்டும். அவர்களது ஊக்கங்களை மேம்படுத்தும் ஒதுக்கீடுகளை வழங்குதல் வேண்டும். இதுதான்

முகாமைத்துவம். இதன் மூலம் முகாமையாளருக்கும் பணியாளருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்படும்.

மற்றுமொரு பழம்பெரும் முகாமைத்துவ விஞ்ஞானியாகிய ஹென்றி பெயோல் (Hendry Fayol) முகாமைத்துவமானது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டளையிடல், இணைப்பாக்கம், கட்டுப்படுத்தல் எனும் பணிகளை உள்ளடக்கியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

லூதர் குலிக் அரசாங்க நிர்வாக முகாமைத்துவத்தினை POSDCORB View Point எனும் பெயரில் பிரபல்யமாக்கியுள்ளார்.

### திட்டமிடல் (Planning)

கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டமாகும். இது பொதுக் கொள்கையினை மையப்படுத்துவதாக இருக்கும்.

### ஒழுங்கமைத்தல் (Organizing)

பொதுக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைகளைச் செய்வதற்குத் தேவையான நிர்வாக அமைப்பினை உருவாக்கி, பகுதிகளாகவும், பிரிவுகளாகவும் அதனைப் பிரித்து வேறுபட்ட திணைக்களங்களுடாக வேலைகளைச் செய்வதாகும்.

### பணியாளர் (Staffing)

ஒழுங்கமைப்பின் ஒவ்வொரு திணைக்களத்திற்குமான ஆளணியினரை நியமனம் செய்து அவர்களுக்கான பயிற்சியை வழங்கிச் சிறப்பான வேலை செய்யும் சூழலைத் தோற்றுவிப்பதாகும்.

### நெறிப்படுத்துதல் (Directing)

பொருத்தமான அறிவுறுத்தல்களையும், கட்டளைகளையும், வழங்கிப் பொதுக் கொள்கைகளுக்கான திட்டமிடல்களையும், ஒழுங்கமைப்பினையும் நெறிப்படுத்துவதாகும்.

### இணைப்பாக்கம் (Coordinating)

நிர்வாக ஒழுங்கமைப்பின் வேறுபட்ட திணைக்களங்கள், பகுதிகள், பிரிவுகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள், அத்துமீறல்களைக் கட்டுப்படுத்திக் கடமைகள் சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்தல்.

### அறிக்கையிடல் (R - Reporting)

அறிக்கையிடல் ஒழுங்கமைப்பின் செயற்பாடுகள் பற்றி ஊழியர்களை அறிவூட்டுவதும் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் உச்ச முகாமைத்துவத்திற்குக் கிடைக்க பெறும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும்.

### வரவுசெலவுப்படுத்தல் (Budgetting)

இது நிதித் திட்டமிடலைக் குறித்து நிற்கின்றது. நிர்வாகத்தின் எல்லாச் செயற்பாடுகளும் நிதி முகாமைத்துவத்துடன் தொடர்புபடுவதால் நிதியினைக் கணக்கிடுவதும், கட்டுப்படுத்துவதும் முதன்மையான செயற்பாடாகின்றது. நிர்வாகத்தில் நிதி உறுதித் தன்மையினை ஏற்படுத்தி, பணவீக்கத்தினை தவிர்க்க வேண்டுமாயின் வரவு, செலவு முன்கூட்டியே திட்டமிடப்படல் வேண்டும்.


பொது நிர்வாகத்தின் சீரான செயற்பாட்டிற்கு அமைப்பின் கீழ் நிலை ஊழியர்களின் பங்குபற்றல் அவசியமாகும். அத்துடன் நிர்வாகத்தில் மக்கள் பங்குபற்றுதலுதம் அவசியமாகும்.

### முகாமைத்துவத்திற்கும் பொது நிர்வாகத்திற்கும் இடையிலான தொடர்பு

முகாமைத்துவமும், நிர்வாகமும் நடைமுறையில் ஒரே கருத்திலே பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இரண்டுக்குமிடையில் பல வேறுபாடுள் காணப்படுகின்றன.

- முகாமை என்பது அருமையான வளங்களைப் பயன்படுத்தி நிர்வாகத்தின் இலக்கினை அடைய முற்படுவதாகும்.
- நிர்வாகமானது முகாமைத்துவத்திற்குள் அடங்குகின்ற ஒரு சிறு பகுதி
- நிர்வாகம் என்பது முகாமைத்துவ இலக்குகளை நிறைவேற்றி கொள்கைகளையும் திட்டங்களையும் திறமையான முறையில் செயற்படுத்த உதவும் கருமமாகும்.

- முகாமைத்துவ செயற்பாடுகள் சரிவர இயங்குகின்றனவா? என மேற்பார்வை செய்தல் நிர்வாகம் ஆகும். இதனால் நிறுவனச் செயற்பாடுகள் நாளாந்தம் நிறைவேற்றுவதற்கு உதவும் கருமமாக நிர்வாகம் காணப்படுகின்றது.
- நிர்வாகம் சரிவர இயங்கினால் முகாமைத்துவம் நிறுவனங்களில் திறமையாக நடைபெற வாய்ப்பளிக்கும்.
- முகாமையும் நிர்வாகமும் பின்வரும் செயற்பாடுகளைக் கொண்டமைந்தள்ளது.



# சர்வதேச அரசியல்

சர்வதேச அரசியலானது பொதுவாக அரசியலைப் போன்றதாகும். அரசியல் என்பது **ஒத்தவையல்லாத நலன்களை உடைய குழுக்கள் ஒவ்வொன்றும் தமது நலன்களை நிறைவு செய்து கொள்வதற்கு தாம் இயன்றளவு மேற்கொள்ளும் இடைவினையே அரசியல் ஆகும்.** இதன்படி அரசியல் என்ற சொல் **நலன், மோதல், அதிகாரம்** போன்ற மூன்று விடயங்களோடு தொடர்புபடுகின்றது.

சர்வதேச அரசியல் என்பது **ஒத்தவையல்லாத நலன்களைக் கொண்ட இறைமை பொருந்திய அரசுகளுக் கிடையிலான இடை வினைகளும் தொடர்புகளும் ஆகும். இது சர்வதேச அரசியல் எனப்படும்.**

**H.J. Morganthau** என்பவர் "தேசங்களுக்கிடையில் இடம்பெறும் அதிகாரத்திற்கான் போராட்டமும் அதிகாரப் பிரயோகமும் ஆகும்" எனக் குறிப்பிட்டார். மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்திலிருந்து சர்வதேச அரசியல் என்பது தேசங்கள் தமது ஒத்திசைவற்ற நலன்களை அதிகாரத்தின் மூலம் பாதுகாத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளும் செயன்முறை **சர்வதேச அரசியல்** எனப்படும். Thombson என்பவர் **"தேசங்களுக் கிடையிலான போட்டி மற்றும் அவற்றுக் கிடையிலான தொடர்புகளை சீராக்கி மேம்படுத்தும் நிலைகள், நிறுவனங்கள் என்பன பற்றிய கற்கையாகும்."**

அரசுகள் தமது தேசிய நலன்களை ஏனைய அரசுகளின் நலன்களிற்கேற்ப இசைவாக்கம் செய்யும் செயன்முறை பற்றிய கற்கையாகும். மாற்றமுறும் அதிகார உறவுகளுக்குள் இடம்பெறும் அரச கொள்கைகளின் இடைவினைகள் ஆகும். (Padelfort & Limcoln).

மேற்குறிபட்ட வரைவிலக்கணத்தின்படி **சர்வதேச அரசியல் என்பது தேசங்கள் தமது ஒத்திசைவற்ற நலன்களை அதிகாரத்தின் மூலம் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் செயன்முறையாகும் என்று கூறலாம்.** சர்வதேச சமூகத்தில் பங்கேற்கும் முக்கிய பாத்திரங்களாக அரசுகள், சர்வதேச அமைப்புகள், பல்தேசியக் கம்பனிகள் என்பனவும் சர்வதேச சமூக செயற்பாடுகளில்

தாக்கத்தை ஏற்படுத்தும்விதமாக செல்வாக்குச் செலுத்தும் முக்கிய நபர்கள் என இனங்காணமுடியும். இங்கு முக்கிய பாத்திரங்களாகக் கருதப்படும் சுதந்திர தேசிய அரசுகளுக்கிடையிலான தொடர்புகள் பற்றிக் கற்பதில் சர்வதேச அரசியல் என்ற பாடப்பரப்பில் கவனஞ் செலுத்தப்படுகின்றது.

## தேசிய அரசியல் - சர்வதேச அரசியல்

### ஒத்த பண்புகள்

- இரண்டும் நலன்களை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடாகும். நலன்கள் ஒத்திசைவற்றதாகக் காணப்பட்டால் அவற்றை அடைய முயலும்போது மோதல்கள் ஏற்படும்.
- இரண்டும் தமது நலன்களை நிறைவுசெய்துகொள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன.
- அதிகாரத்தைப் பெறுவதற்கும் உளவியல் வழிமுறைகளையும் பின்பற்றுகின்றன.
- தேசிய அரசியலில் மனிதர்களும் சர்வதேச அரசியலில் அரசுகளும் தத்தமது எதிரிகளுக்கு எதிராக தாமாகவே பலம்பெறுவதில் நாட்டமுடையவர்கள் ஆவர்.

### வேறுபட்ட பண்புகள்

- சர்வதேச அரசியலில் முக்கிய பண்பாக கபடம், நாசகாரம், ஏமாற்று, நம்பிக்கைத் துரோகம் என்பன காணப்படுகின்றன. ஆனால் தேசிய அரசியலில் ஒழுங்கு நியமனங்கள் பின்பற்றப்படும். அரசு தனது பிரசைகளின் நலன்களை ஒழுங்குபடுத்தும்.
- தேசிய அரசியலில் செயற்பாட்டாளர்கள் (தனிப்பட்டவர்கள்) அரசின் பலவந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாவர். சர்வதேச அரசியலில் அரசுகள் பலவீனமான சர்வதேச சட்டத்தின் மூலம் ஆளப்படுகின்றன.
- சர்வதேச அரசுகளில் இறுதி ஆயுதம் போர், தேசிய அரசியலில் சமாதான வழிமுறைகளை பெரும்பாலும் பயன்படுத்துகின்றன.
- தேசிய அரசியல் பாமர மனிதர்களைக் கவரும் ஒரு துறையாகும். சர்வதேச அரசியல் சாதாரண மனிதரைக் கவரும் ஒரு துறையல்ல.

## சர்வதேச அரசியலின் பாடப்பரப்பு

சர்வதேச நிலைமைகளும், தேசங்களுக்கிடையிலான உறவுகளின் இயல்பும் காலத்திற்குக் காலம் மாற்றத்துக்கு உட்படுவதால் சர்வதேச அரசியலின் பாடப்பரப்பினை நிர்ணயம் செய்வது கடினமாகும். எனினும், இத்துறை சார்ந்த அறிஞர்கள் இப்பாடத்துறையின் விடயப்பரப்பாக பின்வரும் அம்சங்களை நிர்ணயம் செய்கின்றனர்.

### (அ) அரசு முறைமை

- சர்வதேச அரசியல் பற்றிய கற்கை அரசு முறைமையுடனேயே ஆரம்பமாகிறது. தேசிய அரசுகளின் தோற்றத்தின் பின்னர் சர்வதேச பரப்பில் அரசு முறைமையே செல்வாக்குச் செலுத்திவந்துள்ளது.
- **இறைமை பொருந்திய அரசுகளுக்கிடையிலான மோதல்களின் வெளிப்பாடே சர்வதேச அரசியல் ஆகும்.**

### (ஆ) தேசிய நலன்

- அரசுகள் தமது அதிகாரத்தின் மூலம் அடைய முற்படும் இலக்குகளே தேசிய நலன்களாகும்.
- ஒவ்வொரு தேசிய அரசும் ஒத்திசைவற்ற தேசிய நலன்களைக் கொண்டுள்ளன. அந்த நலன்களைச் சுற்றியே சர்வதேச அரசியல் ஒழுங்கமைகிறது.

### (இ) தேசிய அதிகாரம்

- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் சர்வதேச அரசியல் கற்கையின் மையக்கரு தேசிய அதிகாரம் அகும்.
- உலகின் பிரதான அரசுகளின் கொள்கைகளையும், பொதுவான சர்வதேச அரசியல் மற்றும் உறவுகளையும் நிர்ணயிக்கும் முக்கியமான காரணி **அதிகாரம்** ஆகும்.
- **சர்வதேச அரசியல் என்பது அதிகாரத்திற்கான போராட்டமே அன்றி வேறொன்றுமில்லை. (Morganthau)**

- சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரத்தின் தன்மை, அதிகாரத்தின் மூலக்கூறுகள், அளவீடு என்பன பற்றியும் வலுச்சமநிலை, அதிகாரச் சமன்பாடுகள், அதிகாரத்தின் மீதான வரையறைகள் என்பன பற்றியும் கற்கப்படுகின்றது.

### (ஈ) வெளிநாட்டுக்கொள்கை

- வெளிநாட்டுக் கொள்கை என்பது சர்வதேச அரசியலின் ஒரு துணைப்பிரிவாகும்.
- அரசுகள் தமது தேசிய நலன்களைச் சர்வதேச மட்டத்தில் சாத்தியமாக்கிக் கொள்வதற்கு வெளிநாட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்துவதோடு அதனூடாகவே ஏனைய அரசுகளுடன் தொடர்பு படுகின்றன.
- அதனால் சர்வதேச அரசியல் பற்றிய கற்கையில் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய ஆய்வும் பிரதான இடத்தைப் பெறுகிறது.

### (உ) சர்வதேச அரசியல் கருவிகள்

- சர்வதேச அரசியலில் அரசுகள் நலன்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு இராஜதந்திரம், வெளிநாட்டுக் கொள்கை, சர்வதேச வர்த்தகம், பொருளாதாரம், இராணுவம் போன்ற கருவிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன.
- அக்கருவிகள் பற்றிய கற்கையும் சர்வதேச அரசியலின் பகுதிகள் ஆகும்.

### (ஊ) தேசியவாதம், காலனித்துவவாதம் மற்றும் ஏகாபத்தியவாதம்

- தேசிய அரசுகளின் தோற்றத்தின் பின்னர் இம்மூன்றும் சர்வதேச அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகள் ஆகும்.

### (எ) சர்வதேச அரசியல் மீதான கட்டுப்பாடுகள்

- சர்வதேச அரசியலில் அரசுகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதில் வலுச்சமநிலை, கூட்டுப்பாதுகாப்பு முறை, சர்வதேச சட்டம், சர்வதேச நிறுவனங்கள், பிராந்தியக் கூட்டுக்கள், ஆயுதப்பரிகரணம் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

## (ஏ) சர்வதேச முறைமை

- சர்வதேச அரசியல் என்பது சர்வதேச முறைமை பற்றிய கற்கையாகவும் அமைகிறது.
- சமகாலத்தில் இருதுருவ முறைமை, பல்துருவ முறைமை என்பவற்றின் அடிப்படையிலும், கண்டங்கள், பிராந்தியங்கள் முறைமை என்ற அடிப்படையிலும் சர்வதேச அரசியல் கற்கப்படுகிறது.

## (ஐ) போரும் சமாதானமும்

- சர்வதேச அரசியல் பற்றிய சகல ஆய்வுகளிலும் போரும் சமாதானமும் பின்னிப் பிணைந்துள்ளன.
- ஒத்தவையில்லாத நலன்களினால் ஏற்படும் மோதல்களின் விளைவாக அரசுகளுக்கிடையில் போர்கள் ஏற்படுகின்றன.
- போர்களைத் தொடர்ந்து சமாதானச் செயற்பாடுகளும் தீர்வுகளும் இடம்பெறுகின்றன.

# சர்வதேச அரசியலின் செயற்பாட்டாளர்களும் அவற்றின் பங்கும்

சர்வதேச அரசியலில் இரண்டு வகையான செயற்பாட்டாளர்கள் காணப்படுகின்றனர்.

1. அரசு
2. அரசு அல்லாத செயற்பாட்டாளர்கள் / நிறுவனங்கள்

## சர்வதேச அரசியலில் அரசு

- சர்வதேச அரசியலில் அரசுகளே பிரதான செயற்பாட்டாளராகும்.
- 1648 வெஸ்ட்பாலிய உடன்படிக்கையின் பின்னர் இறைமை பொருந்திய தேசிய அரசுகளே சர்வதேச அரசியலின் பிரதான அலகுகளாக வளர்ச்சியடைந்து இன்று பிரதான செயற்பாட்டாளராகக் காட்சி அளிக்கின்றன.
- இதன் பின்னர் அரசுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது.
  - 1945 இல் ஐ.நா. தாபிக்கப்பட்டபோது 51 அரசுகள் அதன் உறுப்பரசுகளாக இடம்பெற்றன.
  - தற்போது அவ்வெண்ணிக்கை நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

ஐ.நா உறுப்புரிமையைப் பெற்றுள்ள 192 அரசுகளையும், உறுப்புரிமை பெறாத 8 அரசுகளையும் சேர்த்தால் தற்போது (2010) சுமார் 200 அரசுகள் காணப்படுகின்றன.

- இவை இறைமையும் தன்னாதிக்கமும் உடைய சுதந்திர அலகுகளாகக் கருதப்படுகின்றன.
- பருமன், சனத்தொகை, பொருளாதாரம் மற்றும் இராணுவப்பலம் என்பவற்றின் அடிப்படையில் வேறுபடினும் சகல அரசுகளும் ஒத்த அந்தஸ்தினை உடையனவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

- சர்வதேச அரசியலில் அனைத்து அரசுகளும் சமமான சட்ட அலகுகளாகக் கருதப்படும். இத் தொடர்புகளை அமைதிப்போக்குத் தொடர்புகள், போர்ரீதியான தொடர்புகள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இக் காரணங்களினால் **சர்வதேச அரசியல் போரும் சமாதானமும் பற்றிய கற்றல் விடயமென இனங்காணப்படுகிறது.**
- சர்வதேச சமூகத்தில் காணப்படக்கூடிய சிறப்பம்சம் அவற்றில் காணப்படும் அதிகாரமின்மைத் தன்மையாகும். அரசுகளின் புறநடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தினுள் ஓர் அரசாங்கமோ ஒழுக்கநெறிக்கோட்பாடுகளோ இல்லாமையே காரணமாகும். இதன் பேறாக சர்வதேச அரசியலில் எல்லா அரசுகளும் தமது அதிகாரத்தை விருத்திசெய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. இந்த அதிகாரப் போட்டி அரசுகளுக்கிடையில் மோதல்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்துவதுடன் அரசுகள் போரில் ஈடுபடுவதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

## சர்வதேச அரசியலில் தேசிய அரசுகளின் பண்புகள்

சர்வதேச அரசியலில் தேசிய அரசுகள் பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளன.

### (அ)ஆள்புலம் - Territory

- அரசின் இறைமைத் தன்மையைத் தீர்மானிப்பதில் ஒரு பிரதான தளம் ஆள்புலம் ஆகும்.
- மக்கள் ஒரு குறிப்பிட்ட ஆள்புலப் பிரதேசத்தில் வசித்தல், மொழியையும் சமயத்தையும் கலாசாரத்தையும் கொண்டிருத்தல் ஆகிய காரணங்கள் ஆள்புல அரசுக்கு சட்டமுறைமைத் தன்மையை வழங்குகின்றன.

- இன்று சகல அரசுகளும் ஆள்புலத்தின் அடிப்படையில் இனங்காணப்பட்டு ஆள்புல அரசுகள் என்று அழைக்கப்படுகின்றன.
- இன்று இந்த ஆள்புல எல்லைகளையும் ஆள்புல ஒருமைப் பாட்டையும் பாதுகாத்தல் அரசுகளின் கௌரவம் சார்ந்த பிரச்சினையாக மாறியுள்ளன.
- ஆள்புல அரசுகள் அரசியல் நோக்கில் சுதந்திரமுடையனவாகவும் சட்டமுறை நோக்கில் இறைமையுடையனவாகவும் கருதப் படுகின்றன.
- எவ்வாறாயினும் ஆள்புலம் என்பது அரசுக்கு அரசு வேறுபட்டவை ஆகும்.

## (ஆ) இறைமை

- சர்வதேச முறைமையில் அரசுகள் வெளித் தலையீடுகள் இன்றி தமது உள்ளக, வெளியக விவகாரங்களில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான திறனே இறைமையாகும்.
- அரசின் இறைமையில் வெளியக இறைமையே சர்வதேச அரசியலில் கவனத்தில் எடுக்கப்படுகிறது.
- அரசுகளை சமஅந்தஸ்தில் வைப்பதிலும், அவற்றின் வெளியுறவினை நிர்ணயிப்பதிலும் வெளி இறைமை பயன்படுத்தப்படுகின்றது.
- எனினும் சர்வதேச முறைமையில் இறைமை அரசுகளின் செயற்பாட்டினால் வெளி இறைமைக் கோட்பாட்டில் கூறியது போன்று சாத்தியமாவதில்லை.

இன்று

- விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக ஆள்புல அரசுகளின் இயல்பு மாறியுள்ளமை.
- தேசிய நலன்களுக்குப் பதிலாக வர்க்க நலன்களின் எழுச்சி.
- அரசுகளுக்கு மத்தியில் சகவாழ்வு உணர்வு பரவலடைந்து உள்ளமை.
- அரசுகள் எதிர்நோக்கும் அரசியல், பொருளாதார, சூழல் பிரச்சினைகள்.
- பரஸ்பரம் பொருளாதாரத் தங்குநிலை.

- சர்வதேச நிறுவனங்களினதும் அரசல்லாத செயற்பாட்டாளர்களினதும் வளர்ச்சி.
- போர் அச்சம் போன்ற காரணிகளால் வெளியிறைமை மங்கலடைந்துள்ளது.

### (இ) தேசியவாதம்

- சர்வதேச அரசியலில் அரசுகளின் பிறிதொரு பண்பு தேசியவாதமாகும். அது அரசுகளுக்கான சமூக-உளவியல் தளத்தினைத் தருகிறது.
- தேசியவாதத்தின் அடிப்படையிலேயே தற்கால தேசிய அரசுகள் உருவாகியுள்ளன.
- தேசிய அரசு என்பது மக்கள் தம்மை ஒரு தேசமாகக் கருத்திக் கொள்வதனை வெளிப்படுத்தும் ஓர் அரசியல் அலகாகும்.
- நாடுகள் ஆள்புல ரீதியாக ஒழுங்கமைந்த அரசியல் கூட்டுடன் கூடிய உணரத்தக்க அடையாளமே தேசியவாதமாகும்.

### (ஈ) சர்வதேச அங்கீகாரம்

- சர்வதேச சமூகத்தில் ஓர் அரசு சுதந்திரமும், இறைமையும் பொருந்திய ஓர் அரசியல் அலகாக ஏனைய அரசுகளால் கருதப்படுவதே சர்வதேச அங்கீகாரமாகும்.
- சர்வதேச சமூகத்தில் ஓர் அரசின் இருப்புக்கு சர்வதேச அங்கீகாரம் அத்தியாவசியமாகையால் அரசுகளுக்கிடையிலான உறவில் இவ்வம்சம் முக்கியம் பெறுகிறது.
- சிலவேளை சர்வதேச அங்கீகாரமின்றியும் ஓர் அரசு தனது இருப்பினைப்பெறினும் அதன் வெளியுறவுகள் அதிகம் வரையறைகளுக்குட்படும்.

### (உ) அரசுகளின் சம அந்தஸ்து

- சர்வதேச அரசியலில் சகல அரசுகளும் சட்டரீதியாகச் சமனானவை என்றே கருதப்படுகின்றன.
- ஒவ்வொரு அரசும் ஏனைய அரசுகளை அந்தஸ்திலும் கௌரவத்திலும் சமனானவை என்றே கருதவேண்டும்.
- சர்வதேச ஆவணங்கள் இறைமைச் சமத்துவத்தை அங்கீகரிக் கின்றன.

- எனினும் நடைமுறையில் அரசுகள் அதிகாரத்தின் அடிப்படையில் சமனானவையன்று.

## சர்வதேச அரசியலில் அரசுகளை வகைப்படுத்துதல்

சர்வதேச அரசியலில் அரசுகள் பிரதானமாக மூன்று அளவுகோள்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

### 1. இராணுவபப்பலத்தின் அடிப்படையிலான வகையீடு

இதில் இரண்டு வகைகள் உண்டு.

(i) பெரிய அரசுகள், சிறிய அரசுகள்

(ii) வல்லரசுகள், பெரிய அரசுகள், நடுத்தர அரசுகள், சிறிய அரசுகள்

### 2. வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையிலான வகையீடு

(i) இருக்கும் நிலையினைப் பாதுகாக்க முயலும் அரசுகள்

(ii) இருக்கும் நிலையினை மாற்றியமைக்க விரும்பும் அரசுகள்

### 3. பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படையிலான வகையீடு

(i) மேற்கு அரசுகள், கிழக்கு அரசுகள், அணிசேரா அரசுகள். இவ்வரசுகள் முதலாம் உலக அரசுகள், இரண்டாம் உலக அரசுகள், மூன்றாம் உலக அரசுகள் என்றும் வகைப்படுத்தப் படுகின்றன.

(ii) வடக்கு நாடுகள் - செல்வந்த நாடுகள்
தெற்கு நாடுகள் - வறிய நாடுகள் என்றும் வகைப்படுத்தப் படுகின்றன.

# சர்வதேச அரசியலில் அரசல்லாத செயற்பாட்டாளர்களும் அவற்றின் வகிபங்கும்

சர்வதேச அரசியலில் அரசல்லாத பல்வேறு செயற்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. அவற்றினை பின்வரும் தலைப்புக்களில் நோக்கலாம்.

## 1. உயர்தேச நிறுவனங்கள் (Supernational Organizations)

இவை சர்வதேச முறைமையின் மத்தியமயமான சக்தியாகும். இவற்றுக்கேயுரிய பிரதான பண்புகளாவன,

- தனிப்பட்ட நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டிருத்தல்.
- கோட்பாட்டு ரீதியாக நிறுவனத்தின் அதிகாரம், அதன் உறுப்பு நாடுகளின் அதிகாரத்தைவிட மேம்பட்டதாக இருத்தலாகும். வேறு வார்த்தையில் கூறின் உயர்தேச நிறுவனம் என்பது முழுமையின் ஏனைய பகுதிகளைவிட உயரியதாகும். சர்வதேச முறைமையில் பலவகையான உயர்தேச நிறுவனங்கள் காணப்படுகின்றன.

### (அ) பொது நோக்கத்தினை உடைய உலக நிறுவனங்கள்

சில உயர் தேசப்பண்புகளைக் கொண்ட பொதுநோக்கினை உடைய உலகலாவிய நிறுவனம் ஐ.நாடுகள் தாபனம் ஆகும். உலகின் அனைத்து நாடுகளும் இதன் உறுப்பினரல்லாவிடினும் பெரும்பாலானவை அதில் அங்கம் வகிக்கின்றன. ஐ.நா அதன் உறுப்பு நாடுகளின் விருப்புகளுக்கு அப்பால் ஆயுட் தன்மையையும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது. கோட்பாட்டு ரீதியாக அதன் உறுப்பு நாடுகள் பல துறைகளில் அதன் கொள்கையைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளன.

### (ஆ) பிராந்திய நிறுவனங்கள்

இன்று உலகில் பல்வேறு பிராந்திய நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவை இராணுவம், பொருளாதாரம், அரசியல், சமூகம் என்ற பல நோக்குகளைக் கொண்டு உலகின் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் செயற்படுகின்றன. அமெரிக்க அரசுகளின் அமைப்பு (Organization of American

States - OAS), ஆபிரிக்க ஐக்கிய அமைப்பு (Organization of African Unity - OAU), அரபு லீக், ஆசியான் (Association of South - East Asian Nation - ASEAN) சார்க் (South Asian Association for Reginal Cooperation), ஐரோப்பிய ஒன்றியம் (European Union) என்பவை சில உதாரணங்களாகும்.

**(இ) நட்புக் கூட்டுக்கள் - Aliances**

இராணுவ ஒத்துழைப்பின் அடிப்படையில் இடம்பெறும் பாதுகாப்பு அமைப்புகளும் வரையறுக்கப்பட்ட உயர்தேச நிறுவனங்கள் ஆகும். இதில் முதன்மைத்தன்மை வாய்ந்த சில பண்புகளாவது காணப்படும். உறுப்பு நாடுகள் கூட்டு ஒத்துழைப்புச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன. அவை தமது இறைமையின் ஒரு பகுதியையாவது இதனிடம் ஒப்படைக்க வேண்டும். வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organization - NATO) முன்னைய வெஸ்பாலிய உடன்படிக்கை (1648) போன்றவை பல்தேச நட்புக் கூட்டுக்களுக்குச் சில உதாரணங்களாகும். அனைத்து நட்புக் கூட்டுகளும் உயர்தேச நிறுவனங்கள் ஆவதில்லை. ஐக்கிய அமெரிக்கா - யப்பான் பாதுகாப்பு ஒப்பந்தம் (United States - Japan Security Treaty) இதற்கு உதாரணமாகும். இது உயர்தேச அமைப்பு என்று அழைப்பதற்குத் தேவையான பல்தேசப் பண்பையோ, நிறுவனப் பண்பையோ கொண்டிராத ஒரு இரு தரப்பு ஒப்பந்தமாகும்.

**2. தேசம் கடந்த செயற்பாட்டாளர்கள் - Transnational Actors**

சர்வதேச முறைமையில் அரசல்லாத பிறிதொரு வகையைச் சார்ந்த செயற்பாட்டாளர்களையே தேசங்கடந்த நிறுவனங்கள் உள்ளடக்குகின்றன. தேசம் கடந்த செயற்பாட்டாளர்கள் என்ற தகுதியைப் பெறும் IGO களும் NGO களும் காணப்படுகின்றன. இவை மூன்று பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

1. அவை வழமையாக தலைவர்களையும், பணிக்குழு அமைப்பினையும் கொண்டு ஒழுங்கமைந்தவையாகும்.

2. அவை வரையறுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றும் சிறப்பு அமைப்புக்களாகும். இப்பணிகளின் அடிப்படையில் பல்பணிசார் உயர்தேச நிறுவனங்களில் இருந்து தேசம் கடந்த அரசசார்பு நிறுவனங்கள் பிரித்தறியப்படுகின்றன.

3. இவை சர்வதேச எல்லைகளையும் தாண்டிச் செயல்படுகின்றன. மேலும் அவை எந்தவொரு தனிப்பட்ட அரசினதும் நலன்களுக்கும் கட்டுப்படாத பற்றுதலைக் கொண்டிருக்கும்.

20ம் நூற்றாண்டில் அரசுகளின் எண்ணிக்கை அதிகரிப்போடு ஒப்பிடும்போது, அரசசார்பற்ற நிறுவனங் (IGOs)களும், அரசசார்பற்ற நிறுவனங்க (NGOs) களும் பாரியளவில் அதிகரித்துள்ளன.

**(அ) அரசார்பு நிறுவனங்கள் (IGOs)**

**IGOs**

- IMF - [International Montary Fund]
  (85 உறுப்பு நாடுகள்)
- WHO - [World Health Organization]
  (150 உறுப்பு நாடுகள்)
- FAO - [Food Agricalture Organization]
  (147 உறுப்பு நாடுகள்)
- ILO - [Internation Laber Organazation]

**(ஆ) அரச சா்ர்பற்ற நிறுவனங்கள் (NGOs)**

- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
  (International Committee of Roed Cross)
  (1864 இல் ஆரம்பிக்கப்பட்டது)
- சர்வதேச மன்னிப்பு சபை
  (Amnesty International)
  (1963 இல் ஆரம்பிக்கப்பட்டது -
- சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில்

## (இ) பல்தேசியக் கம்பனிகள் - (MNC)

NGO களில் சர்வதேச வர்த்தகத்தோடு தொடர்பான நிறுவனங்களும் காணப்படுகின்றன. சர்வதேச வர்த்தகத்தின் பரவலோடு ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுடன் இணைந்த பாரிய பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் அல்லது கம்பனிகள் உருவாகியுள்ளன. இந்தப் பாரிய கம்பனிகள் பெற்றுள்ள பொருளாதாரப் பலத்தினால் சர்வதேச விவகாரங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை மேற்கொள்கின்றன. உலக எண்ணெய் விநியோகத்தில் கூட்டுச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. அரச எதிர்ப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. உதாரணம் 1973 இல் சிலியின் மார்க்சிச சார்பு ஜனாதிபதி Salvadore Alledeயைப் பதவி கவிழ்த்து கொலை செய்தமை, நெதர்லாந்து இளவரசர், ஜப்பானிய பிரதமர் என்ற மட்டங்கள்வரை இலஞ்சம் வழங்கியமை, சர்வதேச கம்பனிகளின் மொத்தக்கூட்டு உற்பத்தியைப் பல நாடுகளினதும் மொத்தத்தேசிய உற்பத்திகளுடன் ஒப்பிடுவதன் மூலம் இவற்றின் பொருளாதாரத்தை அறிந்து கொள்ளலாம். 1987 இல் பாரிய பல்தேசியக் கம்பனியாக General Motors of America 101.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மொத்தக்கூட்டு உற்பத்தியைக் கொண்டிருந்தது. இது பெல்ஜியத்தின் மொத்ததேசிய உற்பத்தியை விட ($18.0 பில்லியன்) 27%மும், டென்மார்க்கினை ($38.4 பில்லியன்) விட மும்மடங்காகும். கியூபா ($18.0 பில்லியன்), வியட்நாம் ($18.1 பில்லியன்) போன்ற நாடுகளினைவிட ஐந்து மடங்கும் கூடுதலாகும்.

## (ஈ) சர்வதேச வங்கிகள்

சர்வதேச கம்பனிகளில் பிறிதொரு வகை சர்வதேச வங்கிகளாகும். இந்த வங்கிகள் நாணயமாற்று வீதம், அரசாங்கங்களின் அபிவிருத்தித் திட்டக் கடன்கள் என்ற துறைகளில் செயற்படுகின்றன. 1989 இல் உலகிலேயே பெரிய வங்கி என்ற பெயரை ஜப்பானின் (Dai-Ichi Kangyo Bank) பெற்றிருந்தது. அதன் சொத்துப் பெறுமதி $158.3

பில்லியன் ஆகும். 1986 இல் நான்கு பெரிய ஜப்பானிய பல்தேசிய வங்கிகளான Dai-Ichi Kangyo Bank ($158.3 பில்லியன்), Fuji Bank ($142.7 பில்லியன்), Sumitomo Bank ($135.5 பில்லியன்), ஆகியவற்றின் சொத்துக்களைக் கூட்டினால் அதன் பெறுமதி $570.4 பில்லியன் ஆகும்.

## சர்வதேச அரசியலில் அரசுகளின் வெளிவாரியான நோக்கங்கள்

சர்வதேச அரசியலில் ஒவ்வொரு இறைமையரசும் சர்வதேச சமூகத்தில் தான் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் எனக் கருதும் பல நோக்கங்களைக் கொண்டிருக்கும். அவை வெளிவாரியான நோக்கங்கள் எனப்படும். அந்நோக்கங்கள் தேசிய நலன் என்றும் அழைக்கப்படும். அரசின் வெளிவாரியான நோக்கங்களைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

1. தேசிய பாதுகாப்பு
2. தேசிய கௌரவம்
3. தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்
4. தேசிய பொதுநலனை மேம்படுத்தல்
5. அரசியல் கொள்கையினைப் பாதுகாத்தல்

### (அ) தேசிய பாதுகாப்பு

வெளி அச்சுறுத்தல் மற்றும் ஆக்கிரமிப்புக்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதே தேசிய பாதுகாப்பாகும். இது பிரதான நோக்கமாகக் கருதப்படுகின்றது.

சர்வதேச அரசியலில் ஒன்றுக்கொன்று போட்டியிடும் இறைமை அரசுகளைக் கொண்டிருப்பதனால் எந்தவொரு அரசும் தனது பாதுகாப்பினை முழுமையாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது.

அதனால் சர்வதேச சமூகத்தில் ஒவ்வொரு அரசும் ஓரளவு அபாய நிலையிலேயே உள்ளது. ஆனால் ஒவ்வொரு அரசும் தனது அதிகாரத்திற்கேற்ப அந்த அபாய நிலையைத் தனக்குச் சாதகமாகப்

பயன்படுத்திக்கொள்ளும். இது பலவீனமான நாடுகளைவிட பலமான நாடுகளுக்கே சாதகமாக அமையும்.

**தேசிய பாதுகாப்பின் பொருளும் பிரமாணங்களும்**

- பௌதீக இருப்பை உறுதிப்படுத்தல் (Psysical Survival)
- ஆள்புலத் தொடர்ச்சி (Territorial Continunity)
- அரசியல் சுதந்திரம்

**(ஆ) தேசிய கௌரவம்**

ஏனைய அரசுகளுக்கு மத்தியில் தான் பலம் மிக்கவனாக எழுச்சி பெறுதலும், அந்நிலையினை ஏனைய அரசுகள் ஏற்றுக்கொள்வதுமே தேசிய கௌரவமாகும்.

**தேசிய கௌரவத்தினை நிர்ணயிக்கும் காரணிகள்**

- ஏனைய அரசுகளினால் தேசிய கௌரவம் அங்கீகரிக்கப்படுதல்.
- இறந்தகாலச் செயற்பாடுகளும் நிகழ்காலத் திறனும் - பொருளாதாரச் சக்தி மற்றும் இராணுவத்திறன்

**(இ) தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்**

ஓர் அரசின் தேசிய பாதுகாப்பும் தேசிய கௌரவமும் அதன் பொருளாதாரப் பலத்திலும் தங்கியிருக்கும்.

அதனால் அரசுகள் சர்வதேச சமூகத்தில் தம்மைப் பொருளாதார ரீதியாக உறுதிப்படுத்திக் கொண்டு அதனை மேலும் விருத்திசெய்ய முற்படுகின்றன. பொருளாதாரம் பலவீனமுற்றால் தேசிய பாதுகாப்பும் தேசிய கௌரவமும் பலவீனமுறும்.

**உதாரணம் I** றேகன் ஆட்சிக்காலத்தில் 1980களின் முதல் அரைப் பகுதியில் அமெரிக்கா எதிர்நோக்கிய பிரச்சினைகள்.

- பெரிய கடனாளியாக மாறியமை - 3 ட்றில்லியன் டொலர்
- அதிகரித்த வரவுசெலவுத்திட்ட இடைவெளி - 155 பில்லியன் டொலர்

- வேலையில்லாப் பிரச்சினை 8% ஆக அதிகரித்தமை
- விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் பின்னடைவு

**உதாரணம் II** 1985களின் பின்னர் சோவியத் ரஷ்யாவின் நிலை.

இதன் விளைவாக,

- ஆட்சிமுறை வீழ்ச்சியுற்று சோவியத் யூனியன் கலைந்தமை
- தேசிய கௌரவம் முழுமையாக இல்லா தொழிந்தமை
- சர்வதேச அரசியலில் வகித்த ஆதிக்கநிலை முழுமையாக இல்லாதொழிந்தமை.

## (ஈ) தேசிய பொது நலனை மேம்படுத்தல்

எந்தவொரு அரசினதும் உள்வாரியானதும் வெளிவாரியானதுமான கொள்கையின் இறுதி இலக்கு தேசிய பொதுநலனை மேம்படுத்துவதாகும்.

இம்முயற்சியின்போது அரசுகள், பல்தேசியக் கம்பனிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் என்பவற்றின் துணையை நாடுகின்றன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசுகளுக்கும் அந்நிறுவனங்களுக்கும் இடையில் மோதல்களும் ஏற்படுகின்றன.

## (உ) அரசியற் கொள்கையினைப் பாதுகாத்தல்

குறிப்பிட்ட முறையின் அடிப்படையில் அமைந்த சமூக இருப்பின் மூலம் தனிமனித மற்றும் சமூகநலன்களை அடையமுடியுமென்ற நம்பிக்கைகளின் கூட்டுமொத்தமே அரசியற் கொள்கையாகும். இதன் பண்புகளாவன,

- தாம் நம்பிக்கை கொண்டுள்ள அரசியற் கொள்கை ஏனையவற்றைவிடச் சிறந்தது என நம்புதல்.
- அக்கொள்கை முழு உலகிலும் நிலவவேண்டும் என நம்புதல்.

**உதாரணங்கள்**

- அமெரிக்கா நம்பிக்கை வைத்த தாராள ஜனநாயக மற்றும் பொருளாதாரக் கொள்கை.
- சோவியத் யூனியன் நம்பிக்கை வைத்திருந்த கம்யூனிசக் கொள்கை.
- 1979ல் ஈரானில் அதிகாரத்துக்கு வந்த ஆயத்துல்லா கொமேனி முன்வைத்த இஸ்லாமியக் கொள்கை.

## இந்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு நாடுகளுக்கிடையிலான தொடர்பைப் பேணும் வழிமுறைகள்

சர்வதேச முறைமையில் அரசுகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதிலும் தமக்கிடையிலான தொடர்புகளை மேற்கொள்வதிலும் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன.

(அ) வெளிநாட்டுக்கொள்கை
(ஆ) இராஜதந்திரம்
(இ) பொருளாதார அதிகாரம் அல்லது கருவிகள்
(ஈ) ஊடுருவல்
(உ) போர்

### (அ) வெளிநாட்டுக் கொள்கை

சர்வதேசச் சூழலுக்கு ஏற்ப ஏனைய நாடுகளின் நடத்தையை மாற்றும் வகையிலும் தமது செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் வகையிலும் சமூகங்களால் வெளிப்படுத்தப்படும் செயற்பாடுகளின் செயன்முறையே வெளிநாட்டுக்கொள்கையாகும்.

**அல்லது**

இன்றைய பூகோள கிராம முறைமையில் தவிர்க்க முடியாத அரசர்களுக்கிடையிலான தொடர்புகளும் பரஸ்பரம் தங்குநிலை என்பவற்றை மேற்கொள்வதற்கு முறையாக வகுக்கப்பட்ட ஒரு கொள்கை முறையே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

ஒரு அரசு தனது முக்கிய நலன்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கு ஏனைய அரசுகளுடன் தொடர்புபட்டுச் செயற்படும் போது அவற்றின் நடத்தைப் பாங்கினை உருவமைக்கும் மூலக் கொள்கைகளே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

## வெளிநாட்டுக் கொள்கை பற்றிய வரைவிலக்கணங்கள்

ஏனைய அரசுகளின் நடத்தையை மாற்றும் வகையிலும் சர்வதேச சூழலுக்கேற்ப தமது செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் வகையிலும் சமூகங்களால் வெளிப்படுத்தப்படும் செயற்பாடுகளின் செயன்முறையே வெளிநாட்டுக் கொள்கையாகும். - George Modeski

ஓர் அரசு பரந்த வகையில் திட்டமிட்ட நோக்கங்களையும் நலன் களையும் பாதுகாத்து எய்தப்பெறுவதற்கு அவற்றைத் திடமான செயற்பாடுகளாக மாற்றும் செயன்முறையின் பிரதான கருவியே வெளிநாட்டுக் கொள்கையாகும். - Padelford & Lincoln

ஓர் அரசு தனது முக்கிய நலன்களைப் பாதுகாத்து மேம்படுத்து வதற்கு ஏனைய அரசுகளுடன் தொடர்புபட்டுச் செய்யப்படும் போது அவ்வரசின் நடத்தைப் பாங்கினை உருவமைக்கும் மூலக் கொள்கையே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

## வெளிநாட்டுக் கொள்கையின் பகுதிகள்

1. சில நாடுகளுடன் தொடர்புகொள்வதைப் பகிஷ்கரித்தல்.
   உ+ம்: இலங்கை கடந்த காலத்தில் இஷ்ரேலுடன் தொடர்பு கொள்ளாமை.
2. சில நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொள்ளுதல்.
   உ+ம்: குடியேற்ற நாட்டுத் தொடர்பு
   - பலமிக்க நாடுகளுக்கிடையிலான தொடர்பு
   - மரபுசார் நட்புத் தொடர்பு
   - விஷேட அரசியல் தொடர்பு
   - உலக நட்புக் கூட்டுகளுடனான உறவு
   - பிராந்திய உறவுகள்
3. அணிசேராக்கொள்கை
4. தனிமையாக இருக்கும் கொள்கை
5. சமாதான சகவாழ்வுக் கொள்கை

## வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கும் காரணிகள்

### அ. உள்நாட்டுக்காரணிகள்

(அ) புவியியல் நிலை

(ஆ) தேசியத்திறன்

(இ) வரலாறு

(ஈ) பொதுஜன அபிப்பிராயம்

**ஆ. வெளிவாரியான காரணிகள்**

(அ) உலக முறைமையில் தேசிய அரசுகளின் தன்மையும் செயற்பாடுகளும்.

(ஆ) சர்வதேச சட்டமும் சர்வதேச நிறுவனங்களின் செயற்பாடும்

(இ) சர்வதேச பொதுஜன அபிப்பிராயம்

**இ. கொள்கை வகுப்போரின் செயற்பாடுகள்**

### (ஆ) இராஜதந்திரம்

பேச்சுவார்த்தைகளின் மூலம் சர்வதேச உறவுகளை முகாமைப் படுத்துவதற்கு அல்லது அரசு உறவுகளை சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப ஒழுங்குபடுத்தி முகாமைப்படுத்த பயன்படுத்தப்படும் உபாயம் ஆகும். - Oxford Dictionary

அல்லது

இறைமை பொருந்த சுதந்திர அரசுகளின் அரசாங்கங் களுக்கிடையில் இடம்பெறும் உத்தியோகபூர்வமான உறவுகளைக் கொண்டு நடத்துவதற்கு அறிவையும் உபாய முறைகளையும் பிரயோகிக்கும் கலையாகும். பொருட்படுத்துவதற்கு அறிவையும் உபாயமுறைகளையும் பிரயோகிக்கும் கலையாகும். - Earnest Salow

### (இ) பொருளாதார அதிகாரம்

தற்கால சர்வதேச அரசியலில் நாடுகள் தமது நோக்கங்களை அடைவதற்கும் ஏனைய நாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் ஒரு பிரதான கருவியாகப் பொருளாதாரத்தைப் பயன்படுத்துகின்றன. 1945ம் ஆண்டு America பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கை சர்வதேச அரசியலில் அமெரிக்காவின் செல்வாக்கு உயர்வடைவதற்கு அந்த நாட்டின் (America) பொருளாதார பலமே முக்கிய காரணமாக அமைந்தது.

### (ஈ) ஊடுருவுதலும் தலையிடுதலும்

அரசுகள், பகைமை நாட்டின் உள் விடயங்களில் இரகசிய முறைகளினூடாக பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி அந்த அரசை தமக்குத் தேவையான விதத்தில் வழிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஊடுருவல் ஆகும். பகைமை நாட்டின் அரசியல் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் அரசின்

நடத்தையை மாற்றியமைத்தல், தலையிடுதல் எனப்படும். இதன் பொருட்டு அரசுகள் வெளிப்படையற்ற முறைகளைப் பயன்படுத்துகின்றன. இரகசிய உளவுச் சேவை, வேறு மறைமுகமான உத்திகள்.

### (உ) போர்

ஒவ்வொரு அரசுகளும் தமது தேசிய நலன்களையும், வெளிவாரியான நோக்கங்களையும் பூர்த்தி செய்வதற்கு பிறிதொரு கருவி போர் ஆகும்.

### போர் பற்றிய வரைவிலக்கணம்

1. முரண்பட்ட இரு அரசியல்களை வழிநடத்திச் செல்லும் குழுக்கள் ஒவ்வொன்றும் தனது கொள்கையை மற்றவர்மீது திணிப்பதற்காக அந்தக் குழுக்களிடையில் இடம்பெறும் ஒழுங்குபடுத்தப்பட்ட அதிகாரப் பிரயோகம் போர் ஆகும்.
2. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குழுக்கள் ஆயுதப் படைகள் மூலம் ஒரு மோதலை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கும் சட்டரீதியான போர் - Quincy Wrights
3. போர் என்பது அரசியல் செயலாகும். இது ஓர் அரசியல் சூழ்நிலையில் இருந்தும் ஓர் அரசியல் உத்தேசத்தின் விளைவாகவும் தோன்றும்

### போரை உருவாக்கும் காரணிகள்

1. உளவியல் காரணிகள்
   - மனிதனின் இயல்பும் பண்புகளும் உளவியல் தூண்டல்களும் போருக்குக் காரணமாய் அமைகின்றன.
   - மனிதன் அழிவு நாட்டமுடையவன். மற்றையவன் மீது அழிவை ஏற்படுத்தி மகிழ்ச்சியுறுபவன்.
2. பொருளாதாரக் காரணிகள்
   - மிகை உற்பத்தி போருக்குக் காரணமாகிறது - கார்ல் மார்க்ஸ்
   - கைத்தொழில் மயமாக்கல் போரை ஏற்படுத்தியுள்ளது
3. அரசியல் காரணிகள்
   - தேசிய நலன்களினால் உந்தப்படும் போது அரசுகள் போரில் ஈடுபடுகின்றன.
   - தேசியப் பாதுகாப்பின் மீதான ஆர்வம் போரை ஏற்படுத்தும்

4. சர்வதேச முறைமை
   சர்வதேச முறைமையில் நிலவும் அராஜகத் தன்மை போரை ஏற்படுத்தும்

## போரின் வகைகள்

1. முழுமையான போர்
2. வரையறுக்கப்பட்ட அனுப் போர்
3. வரையறுக்கப்பட்ட போர்
4. முன்னதாகக் கைப்பற்றித் தனதாக்கும் போர்
5. கொரில்லாப் போர்
6. சிவில் போர்

போரானது அதிக அழிவையும் செலவையும் ஏற்படுத்தும். அரசுகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளப் போரை ஒரு உத்தியாக பயன்படுத்துகின்றன.

ஒரு அரசு பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் போரைப் பயன்படுத்துவதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் மூன்று உள்ளன.

1. பிரச்சனையை இராஜதந்திர வழிமுறை மூலம் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்தல்
2. இராஜதந்திர முறை தோல்வியுற்றால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என அச்சுறுதல்.
3. அச்சுறுத்தல் மூலம் எதிரி கீழ்ப்படியாவிட்டால் வன்முறையை மேற்கொள்ளல். இந்த நடவடிக்கையும் தோல்வியடைந்தால் மட்டுமே இறுதி நடவடிக்கையாகப் போரை நடத்த வேண்டும்.

ஒரு அரசு வேறொரு அரசுடன் போர்தொடுக்கக் கருதினால் பின்வரும் நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும்.

1. தமது நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்பதனை நாட்டு மக்களும் உலக மக்களும் விளங்கிக் கொள்ளச் செய்தல்.
2. போரில் ஈடுபட்டால் வெற்றி பெறும் வரை போர் செய்தலில் மிகுந்த மனவுறுதி கொண்டிருத்தல்.
3. அரசியல் நோக்கங்கள் இராணுவ நோக்கங்கள் என்பவற்றைத் தெளிவாகக் காட்டுதல்.

4. குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மட்டும் போதுமான அளவு இராணுவ பலத்தை ஈடுபடுத்தல்.
5. நாட்டு மக்களின் நம்பிக்கையை பூரணமாகப் பயன்படுத்துதல்.

சுருக்கமாகக் கூறினால் சர்வதேச அரசியலில் அரசுகள் நிலைத்திருப்பதும் அவற்றின் செயற்பாடுகளும் ஒவ்வொரு அரசும் தாம் பெற்றிருக்கின்ற அதிகாரத்தின் அளவிற்கேற்பவே தீர்மானிக்கப்படுகிறது.

**தேசிய அதிகாரம் - சர்வதேச அரசியலைக் கற்கும் போது தேசிய அதிகாரம் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும்.**

தேசிய அதிகாரம் என்பது ஓர் அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் இருக்குமேயாயின் அதனைத் தேசிய அதிகாரம் எனக்கூறலாம். ஹான்ஸ் ஜே மோர்கன்தோ குறிப்பிடுகின்றார். இன்னொரு வகையில் கூறுவதாயின் ஓர் அரசு தனது விருப்பை வேறொரு அரசின் மீது திணித்து தமக்குத் தேவையான முறையில் குறிப்பிட்ட அந்த அரசைக் கட்டுப்படுத்துவதும் அதற்குக் கீழ்ப்படியாவிடில் தனது செல்வாக்கைப் பிரயோகிப்பதன் மூலம் கீழ்ப்படியவைக்கும் ஆற்றல் தேசிய அதிகாரம் எனக் கருதப்படுகிறது.
தேசிய அதிகாரத்தை செயற்படுத்தும் உத்திகள்

அ. செல்வாக்கை பிரயோகித்தல்
ஆ. கொடைகளை வழங்குதல்
இ. தண்டனை விதித்தல்
ஈ. பலப்பிரயோகம் / அதிகாரப் பிரயோகம்

**அ. செல்வாக்கைப் பிரயோகதித்தல்**

ஒரு அரசு இன்னொரு அரசின் மீது இராஜதந்திர நடவடிக்கை மூலம் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க முடியும். இதனைத் தூதுவர்கள் இராஜதந்திரிகள் மேற்கொள்கின்றனர். வாதப்பிரதிவாதங்கள் தர்க்க ரீதியான உத்திகள் மூலம் இம்முறையினை மேற்கொண்டு குறிப்பிட்ட அரசின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

### ஆ. கொடை வழங்குதல்

ஒரு நாடு இன்னொரு நாட்டிற்கு பல்வேறு விதமான கொடைகளை வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட நாட்டைக் கட்டுப்படுத்த முடியும். உதாரணம் பொருளாதார உதவிகள், அரசியல் இராணுவ பொருட்கள் ரீதியான உதவிகளை வழங்க முடியும்.

### இ. தண்டனை விதித்தல்

கொடை வழங்குவதை நிறுத்துவதன் மூலமும் முதலீடுகளை நிறுத்துவதன் மூலமும் ஓர் அரசுக்குத் தடைகளை வழங்க முடியும். அத்துடன் அரசுக்கெதிரான பிரச்சாரங்களைச் செய்வதன் மூலம் கோபமூட்டும் நடவடிக்கைகளையும் செய்வதுடன் வேறு அரசுகளுக்கு வெளிப்படையான உதவிகளை வழங்குவதன் மூலம் குறிப்பிட்ட அரசுக்கு மறைமுகமான தண்டனை வழங்க முடியும்.

### ஈ. அதிகாரத்தைப் பயன்படுத்தல்

போர் நடவடிக்கை மூலம் ஓர் அரசு தனது அதிகாரத்தை பயன்படுத்த முடியும். ஒரு அரசு தனது தேசிய பலத்தை உருவாக்கி கொள்வதில் பல காரணிகள் இணைந்துள்ளன.

1. இயற்கையான காரணிகள் - நாட்டின் அமைவிடம், இயற்கை வளம் சனத்தொகை.

2. விஞ்ஞானம், தொழில்நுட்பம், கைத்தொழில் காரணிகள், தொழினுட்பத் திறன், விவசாயம் சார் திறன், படைத்திறன்
3. அரசியல் காரணிகள் - அரசாங்கத்தின் தன்மை, பணிக்குழு முறை உத்தியோகபூர்வ அதிகார முறை) உருவாக்கப்பட்டுள்ள விதம் அதன் வினைத்திறன்.
4. சமூகம் மற்றும் கருத்துக்கள் சார்ந்த காரணிகள் - நாடு ஏற்றுக் கொண்ட தேசிய கருத்துக்கள், தேசிய உணர்வுகள், தேசிய தனித்துவம், சமூகக் கட்டமைப்பு, தேசிய ஒருமைப்பாடு
5. வெளிவாரி மற்றும் வேறு காரணிகள் - நாட்டின் பெருமையும், நற்பெயரும், வெளிநாட்டு உதவியைப் பெறும் ஆற்றல், இரகசிய உளவுச் சேவையின் வினைத்திறன்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் மூலம் சர்வதேச சமூகத்தில் காணப்படுகின்ற அதிகாரமின்மை காரணமாக அரசுகள் தாம் விரும்பியவாறு நடப்பதற்கு சர்வதேச சமூகத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அரசுகளுக்கிடையில் அடிக்கடி யுத்தம் ஏற்படுகின்றது. நாடுகளுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த கடினமான ஒன்றாக காணப்படுகிறது. ஆகவே நாடுகளுக்கிடையில் அதிகாரப் போட்டிகளைக் கட்டுப்படுத்தி சர்வதேச சமூகத்தை நல்ல முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அரசுகளுக்கிடையில் இடம்பெறுகின்ற அதிகாரப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தி சர்வதேச சமாதானத்தை உருவாக்கி முன்னெடுத்துச் செல்வதற்கு சர்வதேச அரசியலில் பயன்படுத்தக்கூடிய உத்திகள் பின்வருமாறு.

1. அதிகாரச் சமநிலை
2. கூட்டுப் பாதுகாப்பு
3. சர்வதேசச் சட்டம்
4. ஆயுதங்களைக் கட்டுப்படுத்தலும் ஆயுதப்பரிகரணமும்
5. உலக அரசாங்கம்.

**அதிகாரச் சமநிலை**

இந்த எண்ணக்கருவின் அடிப்படையைப் பின்வரும் முறையில் எடுத்துக்காட்டலாம்.

- அதிகாரச் சமமின்மை நிலைமைகள் நிலவும் போதே அரசுகள் போரில் ஈடுபடுகின்றன.
- அரசுகள் சமமான அதிகாரமுடையனவாக இருப்பின் போரில் ஈடுபட முன்வரமாட்டாது. ஏனெனில் சமமான அதிகாரமுடைய இரு நாடுகள் ஒன்றோடொன்று போர் செய்யும் போது எந்நாடும் வெற்றியை உறுதியாகப் பெறமுடியாதிருப்பதனாலாகும்.
- இதனால் அரசுகளில் அதிகாரங்களை சம அளவானதாக அமைப்பின் அரசுகளுக்கு இடையில் போர் ஏற்படுவதைத் தவிர்த்து சர்வதேச சமாதானத்தை பாதுகாத்து முன்னெடுத்துச் செல்ல முடியும்.

◇ அதிகாரச் சமநிலை உருவாக்கப்படுவதனை அரசுகள் தனித்தனியாகச் செய்ய முடியும் அன்றேல் அரசுகள் கூட்டமான மட்டத்தில் செய்ய முடியும்.

இந்தத் தர்க்கம் உண்மையைப் போலத் தோன்றினாலும் தற்காலத்தில் உலகில் உருவாகியுள்ள அரசுகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளமையாலும் அவற்றிற்கிடையே அளவுக்கதிகமான பரந்தளவு பேறுபாடு காணப்படுவதினாலும் அதிகாரச் சமநிலை எண்ணக்கரு செயன்முறை ரீதியில் நடைமுறைப்படுத்தப்படக் கூடியதொன்றல்ல.

## கூட்டுப்பாதுகாப்பு

சமாதானத்தை விரும்பும் அரசுகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து தமது கூட்டு அதிகாரத்தை சமாதானத்துக்கு எதிராகச் செயற்படும் அரசுகளுக்கு அல்லது அரச குழுக்களுக்கு எதிராகப் பயன்படுத்தி ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள அரசு அல்லது அரசுக் குழுக்களை அடக்கி சர்வதேச சமாதானத்தை உறுதிப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல் என்னும் அடிப்படை மீது இந்த எண்ணக்கரு உருவாக்கப்பட்டுள்ளது.

◇ 1918 இல் சர்வதேசச் சங்கம் 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை என்பன தாபிக்கப்பட்டமை இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டேயாகும்.

◇ எனினும் இரண்டு அமைப்புகளும் எதிர்பார்த்த விதத்தில் கூட்டுப்பாதுகாப்பு எண்ணக்கரு செயற்பாட்டை முன்னெடுக்க இயலாதிருந்தன. இதற்கு இந்த அமைப்புக்களின் உறுப்பு அரசுகளிடையே கூட்டுப் பாதுகாப்புச் செயற்பாடு உருவாகத் தேவையான பொது விருப்பினை ஏற்படுத்த முடியாமையே காரணமாகும்.

### மதிப்பீடு

கோட்பாட்டு ரீதியாகத் தர்க்க ரீதியானதாயினும் நடைமுறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

- கூட்டுப்பாதுகாப்பின் அடிப்படை நிபந்தனைகள் யதார்த்த பூர்வமானால் மட்டுமே அதனை தாக்ககரமான முறையில் செயற்படுத்தலாம்.

- கூட்டுப்பாதுகாப்பு பிழையான கருதுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- கூட்டுப்பாதுகாப்பு முறை தற்கால சர்வதேச அதிகார உறவை முகாமைப்படுத்துவதற்குப் பொருத்தமான முறையன்று - Prof. Inis Claude காரணம் ஆயுத முறையின் வளர்ச்சியாகும்.
- அண்மைக்கால மாற்றங்களின் கீழ் கூட்டுப்பாதுகாப்பு காலங்கடந்ததாக மாறியுள்ளது. (Claude)
- தேசங்கள் தமது தேசிய நலன்களையும் அரசியல் வேறுபாடுகளையும் சர்வதேச சமாதானத்துக்காகக் கீழ்ப்படுத்த விரும்பாமையால் கூட்டுப்பாதுகாப்பு சாத்தியப்படுவதில்லை.
- தேசங்களின் முரண்பட்ட நலன்கள், ஒரு பொது நோக்கின்மை, நிராயுதப் போர், குழுப் போட்டிகள், அணுவாயுதப் போர் அச்சுறுத்தல் என்பன தாக்ககரமான கூட்டுப்பாதுகாப்பு முறைமைக்கு எதிரான காரணிகளாகும்.
- கூட்டுப்பாதுகாப்பு தர்க்கரீதியானதாயினும் நடைமுறையில் அது நம்பகத்தன்மை குறைந்ததாகவும் சாத்தியமற்றதாகவும் காணப்படுகின்றது.

◈ எவ்வாறாயினும் அதிகாரச் சமநிலைமைய விட கூட்டுப் பாதுகாப்பு நடைமுறையில் செயற்படுத்தக்கூடிய உபாயமாகும்.

**சர்வதேசச் சட்டம்**

◈ சர்வதேச அரசுகளின் தொடர்புகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப் படுமாயின் அரசுகளுக்கு இடையே ஏற்படும் மோதல்கள், பிரச்சினைகள் என்பவற்றை முகாமைத்துவம் செய்து சர்வதேச சமாதானத்தை நிலைநிறுத்த முடியும் என்பது இந்த எண்ணக்கருவினால் வலியுறுத்தப் படுகின்றது.

◈ எனினும் இது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் இரண்டு உள.

1. சர்வதேச சட்டம் யாருக்காக நடைமுறைப் படுத்தப்படுகிறது?
2. சர்வதேச சட்டம் யாரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது?

- சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் என்பன கொண்ட சட்டங்களை ஆக்கி, அரசுகளின் இறைமை அதிகாரத்துக்கு மேலாகச் செயற்படுவதற்கான ஆற்றல் உடைய உலக அரசாங்கம் சர்வதேச சமூகத்தில் இல்லாதிருப்பதனால் மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் இரண்டும் எழுந்துள்ளன.
- சர்வதேசச் சட்டம் எனக் குறிப்பிடப்படும் சட்டத்தொகுதி, சர்வதேச அரசுகளின் தொடர்புகளின் போது காணக் கூடியதாயிருந்த போதும் அந்தச் சட்டங்களைப் பின்பற்றுவதோ, பின்பற்றாது விடுதலோ அரசுகளின் சுயேச்சையான விருப்பின் மீதே தங்கியுள்ளது.
- இதனால் சர்வதேசச் சட்டம் அரசுகளின் வெளிவாரி நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் வினைத்திறன்மிக்க உபகரணமொன்றல்ல.

## ஆயுதங்களைக் கட்டுப்படுத்தலும் ஆயுதப்பரிகரணமும்

- இந்த எண்ணக்கரு உருவாக்கப்பட்டிருப்பது அரசுகள் போர் செய்வது ஆயுதங்களைக் கொண்டிருப்பதனாலாகும். எனவே அரசுகளின் போர் ஆயுதங்களை இல்லாதொழிப்பின் அரசுகள் போர் செய்ய மாட்டா எனக் கருதுவதன் அடிப்படையிலாகும்.
- அரசுகளிடம் உள்ள போர் ஆயுதங்களை இல்லாதொழிக்க வேண்டும் என்பது இந்த எண்ணக்கரு மூலம் வலியுறுத்தப் படுகின்றது.
- கோட்பாட்டு ரீதியில் இந்தக் கருத்து மிகச் சரியாக இருப்பினும் செயன்முறையில் இதனை நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சனைகள் உள்ளன.
- முக்கிய பிரச்சினை என்னவெனில் போர் ஆயுதங்கள் இல்லாது அரசுகளின் தேசிய பாதுகாப்பை நடைமுறைப்படுத்துவது எவ்வாறு என்பதாகும்.
- எவ்வாறெனினும் 1945 இன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையும் தனிப்பட்ட மட்டத்திலும் அரசுகளின் போர் ஆயுதங்கள் கட்டுப்பாடு, ஆயுதப் பரிகரணம் தொடர்பான நடவடிக்கைகள் பலவற்றை எடுத்துள்ளன.

◈ எனினும் இன்னமும் முற்றாக ஆயுதப் பரிகரணத்துக்கு அரசுகள் முன்வராதிருப்பதுடன் போர் ஆயுத உற்பத்தியையும் அரசுகள் நிறுத்திவிடவில்லை.

## ஆயுதப் பரிகரண வழிமுறைகளிலுள்ள தடைகள்

### அச்சமும் பாதுகாப்பின்மையும்

ஏனைய நாடுகளின் இராணுவ ஆயத்தங்களும், ஆயுதங்களும் மற்றைய நாடுகளிடையே பாதுகாப்பின்மை என்ற உணர்வையும் அச்சத்தையும் ஏற்படுத்தும்போது அவை ஆயுதப் பரிகரண உடன்பாடுகளுக்கு வரத்தயங்குகின்றன. இது முடிவுறாத சுழற்சியில் இடம்பெறும். அச்சம் நிலவும்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகளும் தோல்வியுறும்.

### பரஸ்பரம் சந்தேகம்

ஒவ்வொரு நாடும் ஏனைய நாடுகளால் முன்வைக்கப்படும் ஆயுதப் பரிகரண ஆலோசனைகளை சந்தேகக் கண்ணோடு நோக்குவதால் அது தொடக்கநிலை முயற்சிகளைத் தடுப்பதோடு ஆயுதப் பரிகரணத் திட்டத்தையும் செயலிழக்கச் செய்கிறது. எனவே தேசங்களுக்கு மத்தியில் பரஸ்பரம் நம்பிக்கை நிலவாமையே ஆயுதப் பரிகரணத்தின் அடிப்படைப் பிரச்சினை ஆகும்.

### தேசிய நலன்

சகல நாடுகளுக்கு தேசிய நலன் நோக்கத்திலேயே ஆயுதப் பரிகரணத்தை நோக்குகின்றன. அதனால் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனைகள் முன்வைக்கப்படும்போது ஆயுதப்பரிகரண மாநாடுகள் தோல்வியுறும். சகல நாடுகளும் அதிகம் பெறுவதற்கும் சிறிது வழங்குவதற்குமே விரும்புகின்றன.

### சர்வதேச முறைமைச் சூழல்

உலகம் இரு முகாம்களாகப் பிரிந்து கெடுபிடிப்போர் ஏற்பட்டதால் வல்லரசுகளுக்கிடையில் போட்டி அதிகரித்து அவற்றுக்கு மத்தியில் பரஸ்பரம் அவநம்பிக்கையைத் தோற்றுவித்தது. அதனால் சகல நாடுகளும் தமது பாதுகாப்பில் கரிசனையாக இருக்க விளையும். இந்தச் சர்வதேசச்சூழல் ஆயுதப் பரிகரணத்துக்குத் தடையாகும்.

**சிறிய அரசுகளின் மனப்பாங்கு**

பெரிய வல்லரசுகள் ஆயுதங்களில் மிதமிஞ்சிய வல்லமையைப் பெற்றதன் பின்னரே ஆயுதப் பரிகரணத்தைப் பற்றிப் பேசுகின்றன. ஏனைய அரசுகள் அந்நிலைமையை அடையாததனால் ஆயுதப் பரிகரணத்தை விரும்புவதில்லை. அவை அதிகாரச் சமத்துவத்தையே வேண்டுகின்றன. இந்நிலை இடம்பெறாதவரை ஆயுதப் பரிகரணம் சாத்தியமில்லை.

**அரசியல் பிரச்சினைகளும் பிணக்குகளும்**

மேலாதிக்கத்துக்கான அரசியல் போட்டி ஆயுதப் பரிகரணத்தை சாத்தியமற்றதாக்குகிறது. கருத்து முரண்பாட்டுக்குரிய அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவரை ஆயுதப் பரிகரணம் சாத்தியமாகமாட்டாது.

**இராணுவத் தொழில்நுட்ப முன்னேற்றம்**

இராணுவத் தொழில்நுட்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதனால் புதிய இராணுவக் கோட்பாடுகளும் யுத்தோபாயங்களும் ஆயுதப்பரிகரண முயற்சியைத் தடுக்கின்றன. மறுபுறம் புதிய ஆயுதங்களும் ஆயுத முறைகளும் ஆயுதப் பரிகரணப் பேச்சுவார்த்தைகளில் பேரம் பேசுதலுக்கான துணுக்குகளாக அமைந்தாலும், பேச்சுவார்த்தை முறிந்தால் அவ்வாயுதங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்படும். இராணுவப் பலமும் திறனும் நாடுகளுக்கு கௌரவத்தையும் மதிப்பையும் வழங்குவதால் ஆயுதப் போட்டியைத் தூண்டுகிறது.

**உலக அரசாங்கம்**

◇ அரசுகளின் வெளிவாரி நடத்தைகளைக் கட்டுப்படுத்த சட்டவாக்க, நிறைவேற்று, நீதித்துறை அதிகாரங்கள் கொண்ட உலக அரசாங்கம் ஒன்று அமைக்க வேண்டுமென்பதில் இந்த எண்ணக்கரு கவனம் செலுத்துகின்றது.

இது வெறுமனே ஒரு எண்ணக்கரு மட்டுமே. நடைமுறையில் இவ்வாறான அரசாங்கம் அமைப்பது ஒரு கனவு என விமர்சகர்கள் கருதுகின்றனர்.

காரணம் உலக மட்டத்தில் தன்னாதிக்க அதிகாரமுடைய உலக அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அரசுகள் தமது தனிப்பட்ட இறைமையதிகாரத்தை விட்டுவிட விரும்பாமையாகும்.

## மோதல் தீர்த்தல் மோதல் முகாமைத்துவம்

மோதல் சமூகத்தில் எல்லாம் படித்தளங்களிலும் மனிதத் தொடர்புகளுடனும் பிணைந்து காணப்படுகிறது. இந்த மோதல் இருவருக்கிடையில் அல்லது இரண்டுக்கு மேற்பட்டோருக்கிடையில் அல்லது இரு தரப்பினருக்கிடையில் அல்லது இரண்டு நாடுகளுக்கிடையே அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையிலும் காணப்படும் இணக்கப்பாடற்ற கலவர நிலையாகும்.

மோதல் என்ற எண்ணக்கரு மிகவும் நிச்சயமற்ற பல்வேறு கருத்து கொடுக்கக்கூடிய சிக்கல் மிக்கதொன்றாகும். மோதல் என்ற பதம் எமது அன்றாட வாழ்க்கையில் பிரயோகிக்கப்பட்டாலும் பிணக்கு, நெருக்கடி, சண்டை, வன்முறை போன்ற பதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பகுத்தறிவில் நோக்கும்போது இவற்றுக்கும் மோதலுக்கும் இடையில் தெளிவான வேறுபாடு காணப்படுகிறது.

### மோதலுக்கான வரைவிலக்கணம்

சாதாரண வடிவில் மோதல் என்றால் “குறைந்தது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களிடையே அல்லது தரப்பினரிடையே அல்லது நாடுகளுக்கிடையே உடன்பாடு காணப்படாமை” என வரையறை செய்யலாம்.

மோதல் என்பது சமூக மாற்றத்தின் உள்ளார்ந்த தவிர்க்கமுடியாத ஒரு விடயமாகும். இது மரபுரீதியான கட்டுப்பாட்டு விதிகளைக் கடந்து சமூக மாற்றங்களால் உருவாக்கப்பட்டு புதிய நிலைகளாக அல்லது வடிவங்களாக உருவெடுக்கும் பல்வேறான முரண்பட்ட கூறுகளைக் கொண்ட நலன்களின் பெறுமானங்களின் நம்பிக்கைகளின் வெளிப்பாடாகும்.

போட்டா போட்டியான அபிலாசைகள் பல்வேறுபட்ட தனித்துவங்கள் மற்றும் மனப்பாங்கு மாற்றங்கள் காரணமாக


ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கிடையில் உருவாகும் எதிர்ப்பை மோதல் எனக் கூறலாம். - "Jemes A.sehellenberg".

ஒன்றுக்கொன்று எதிரான குறிக்கோள்கள், இலக்குகளை அடைய முயற்சிக்கின்றபோது சுயாதீனமான தனியாட்களுக்கிடையில் ஏற்படும் இடைத் தொழிற்பாட்டை மோதல் எனக் குறிப்பிடலாம். "J.L.Hocker and w.wilmot".

ஒன்றுடன் ஒன்று பொருந்தாத குறிக்கோள்களைக் கொண்ட ஆட்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் அது தொடர்பாக கருத்து வெளியிடும்போது சமூக மோதல்கள் தோன்றும். "Louis Kriesourz".

வன்முறையான எதிர்ப்படுதல் போராட்டம் அல்லது உள ரீதியில் நிகழும் போராட்டமே **மோதல்** ஆகும். "The Webster English Dictionary"

மோதல் என்றால் என்ன என்பதைப் பற்றி நோக்கும் போது மோதல் மற்றும் மோதல் தீர்வுக் கற்கையின் விருத்தியில் பாரியளவு பங்களிப்புச் செய்துள்ள பேராசிரியர் ஜொகான் கல்தூங் (Johan Galtung) என்பவரால் முன்வைக்கப்பட்ட மோதல் பாகுபாட்டுக்கான மாதிரி முக்கியமானதாகும். முரண்பாடு ஒரு முக்கோண வடிவில் தோற்றம் பெறும் என்றார். அது மோதல் முக்கோணி எனப்படும். மோதலில் ஒன்றுக்கொன்று நன்கு தொடர்புபட்ட மூன்று அம்சங்கள் இருப்பதாகக் கருத்துத் தெரிவித்தார். அதாவது முரண்பாட்டுக் கட்டமைப்பு /சூழ்நிலை (Context Structure), மனோநிலை (Attitude), நடத்தை (Behaviour) என்பனவே அவையாகும். அந்த வகையில் முரண்பாடுகள்,பொருத்தமில்லாத எதிர்பார்க்கைகள், எதிர்மறையான மனப்பாங்குகள் அல்லது அவநம்பிக்கையான நடத்தைகளிலிருந்து ஆரம்பிக்கலாம் என்கிறார். இங்கு கட்டமைப்பு என்பது முரண்பாட்டுச் சூழ்நிலையை அதாவது தரப்புக்கள் அவர்களிடையே **உள்ள நலன்களுக்கிடையேயான முரண்பட்ட தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது**. தரப்புக்கள் ஒவ்வாத நலன்கள், பெறுமானங்கள், எதிர்பார்க்கைகளைக் கொண்டுவரும்போதே முரண்பாடுகள் உருவாகின்றன. (The Conflict Triangle)




மனோநிலையும் அறிவுணர்ச்சியும் மோதலை உருவாக்குவதில் ஆபத்துமிக்க அதேநேரம், மிக முக்கியமான பங்கை ஆற்றுகின்றன. முரண்பாட்டு மனோநிலை மோதலை உருவாக்கும் உளவியல் செயற்பாட்டைக் கொண்டிருக்கின்றது. ஆதலால் மறு தரப்பினரின் தேவைகளும் நலன்களும் மறுக்கப்படும்போது தப்பபிப்பிராயங்கள் அதிகரிக்கின்றன. ஏமாற்றம் (Frustration), எரிச்சல் (Irriation), கோபம் என்பன வளர்ச்சியடைவதோடு எதிர் மனப்பான்மையும் இரு தரப்பினரிடையே வளருகிறது. இந்தச் சூழ்நிலை ஆக்கிரமிப்பு நடத்தையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது.

முரண்பாட்டு நடத்தை என்பது ஒருவரையொருவர் தாக்க முற்படும் நிலையாகும். அப்போது வெளிப்படையான முரண்பாட்டு நடத்தை பிரதிபலிக்கும். அதாவது முரண்பாட்டு நடத்தை ஒரு தரப்பு மற்றைய தரப்பினது நலன்கள் அல்லது விருப்புக்களை பொருத்தமில்லாத நிலையில் கைப்பற்றுவதன் விளைவாகத் தோன்றுவதாகும்.

“கல்துாங்கின்” முக்கோணத்தின்படி மோதல் ஒன்று மேற்குறிப்பிட்ட எந்தவொரு அம்சத்திலும் ஆரம்பிக்கப்படலாம். எனவே மோதலானது விகிதாசமனற்ற இலக்குகள் மறுதளிக்கும் மனப்பாங்குகள் அழிவுபூர்வமான நடத்தைகள் காரணமாக உருவாகலாம்.

சுருக்கமாகக் கூறினால் மோதல்கள் பொருத்தமில்லாத எதிர்பார்க்கைகள், அவநம்பிக்கையான நடத்தைகள், எதிர்மறையான மனப்பாங்குகள் என்பவற்றிலிருந்து ஆரம்பிக்கலாம் என ஜொகான் கல்தூங் என்பவர் குறிப்பிட்டார்.

கிறிஸ்தோபர் மிக்சல் Christopher Michel என்பவர் தனது சர்வதேச மோதல் கட்டமைப்பு என்ற நூலில் The Structure of in international Conflict மோதலை வரையறை செய்யும்போது அடையமுடியாத இலக்குகளைக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருப்பதாகக் கருதுகின்ற இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தரப்பினர்களுக்கிடையே உள்ள உறவே மோதல் என்கின்றார். உப்சலா Upsala பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான "பீட்டர் வொலன்ஸ்டைன" (Peter Wallenstein) மோதலை வரையறை செய்யும்போது "ஒரே வகையான வரையறைக்குட்பட்ட வளங்களை அடைவதற்காக ஒரே நேரத்தில் குறைந்தது இரு தரப்புகள் போட்டியிடும் அல்லது சண்டையிடும் சமூகநிலை" என்கிறார். இவரது கருத்துப்படி மோதல் பற்றாக்குறை என்னும் விடயத்தை அவசியமாகக் கொண்டிருக்கின்ற ஒரு சமூகக்காட்சிப் பொருளாகும்.

**இவற்றைக்கொண்டு மோதலின் பண்புகளை எடுத்து நோக்கும் போது,**

I இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தரப்புக்கள் பங்குபற்றல்.

II வளப்பற்றாக்குறையில் அல்லது பற்றாக்குறை நிலையில் இது தோற்றம் பெறும்.

III அதன் நடத்தையானது இரு தரப்பினரிடையே அழிவையும், தாக்கத்தினையும் ஏற்படுத்துவதாகவோ அல்லது மற்றைய தரப்பினை நீக்குவதாகவோ இருக்கும்.

IV விளைவுகள் வெளிப்படையாகவும், வெளிப்பார்வையாளர்களால் அளவீடு செய்யக்கூடியதாகவும் இருக்கும்.

**மோதலின் மூலங்கள்**

I நலிவான அரசு, அரசின் உள்வாரி பாதுகாப்புப் பிரச்சினைகள், இன அடிப்படை, புவியியல் அடிப்படை போன்ற அமைப்பு சார்ந்த காரணிகள்.

II பொருளாதார முறைமையில் இடம்பெறும் புறக்கணிப்புகள் நவீனமயமாக்கம் போன்ற பொருளாதார சமூகக் காரணிகள்.

III அரசியல் நிறுவனங்களில் நிகழும் மாற்றங்கள், தேசிய கருத்துகள், அபிப்பிராயங்களைப் புறக்கணித்தல், இடைக்குழுக்கள், அரசியல் உயர்குடி அரசியல் போன்ற அரசியல் காரணிகள்.

IV பண்பாட்டை மாற்றியமைக்கும் பிரச்சினைகளைக்கொண்ட குழுக்களின் வரலாறுகள்.

## அடிப்படையில் மோதல்கள் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

I **காரணிகள்** : வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

II **தேவைகள்** : பாதுகாப்பு மற்றும் கௌரவம் தொடர்பாகத் தோன்றும் தேவைகள் பற்றிய உணர்வு.


III **பெறுமானங்கள்:** நீண்டகால நம்பிக்கைகளும் எடுகோள்களும்.

IV **நிலைமைகள்:** விஷேட தேவைகளையும், ஆசைகளையும் நிறைவேற்றிக்கொள்வதற்கான மிகச் சிறந்த முறையாகத் தெரிவுசெய்து கொள்ளல்.

V **முறைகள்:** குறிக்கோள்களை அடைவதற்காக மக்கள் கையாளும் முறைகள்.

VI **தொடர்பாடல் முறிவடைதல்:** அந்தந்த மக்கட் பிரிவினர் அல்லது தரப்பினரிடையே காணப்படும் தொடர்பாடல் முறிவடைதல்.

VII **வளங்களுக்கான போட்டியும் அதிகாரங்களும்**



## மோதலின் தன்மைகள்

மோதல் ஒன்றினை அதன் எதிர்பார்ப்புக்களின்படி முறையாக எடுத்துக்காட்டலாம். ஆசை தொடர்பான மோதல்கள், பெறுமானங்கள் தொடர்பான மோதல்கள் என வகைப்படுத்தலாம்.

**I ஆசை தொடர்பான மோதல் :**

இது நிலம், வளங்கள் போன்றவற்றுக்காகத் தோன்றும் மோதல்கள் எனலாம்.

**II பெறுமானம் தொடர்பான மோதல் :**

சமயக் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், இனத்துவம் காரணமாக ஏற்படும் மோதல்கள் எனலாம்.

**III தொடர்பு தொடர்பான மோதல்கள் :**

சிறுபான்மை-பெரும்பான்மை ஆளும் வகுப்பு, குடியேற்ற பிரஜைகள், குடியேற்றவாத ஆளப்படும் வகுப்பு, அதிகாரம் போன்றவற்றுக் கிடையிலான மோதல்களைக் குறிப்பிடலாம்.

இவை தவிர

**I சமச்சீரான மோதல்கள்,**

**II சமச்சீரற்ற மோதல்கள்** என்றும் மோதல்களை வகைப்படுத்தலாம்.

சமமான தரப்பினருக்கிடையே உருவாகும் மோதல்கள் சமச்சீரான மோதல்கள் எனப்படும். சமனற்ற தரப்பினரிடையே உருவாகும் மோதல்கள் சமனற்ற மோதல் எனவும் அழைக்கப்படும்.

மோதல் மனித உயிர்களை அழிக்கும் அல்லது ஆயுதமேந்திய அழிவுபூர்வமான போராட்டமாக மாறுமாயின் நிச்சயமாக அது சமூக முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகவே அமையும். அழிவுபூர்வமான மோதல்களை 3 கட்டங்களில் இனங்காணலாம்.

I வீட்டு மோதல்கள் (Domestic Conflicts)

II அரசக மோதல்கள் (Intra-State Conflicts)

III அரசுகளுக்கிடையிலான மோதல்கள் (Inter-State Conflicts)

இவற்றில் இரண்டாம், மூன்றாம் வகையைச் சேர்ந்த மோதல்கள் உயிர்ச்சேதங்கள், சொத்துச்சேதங்கள். சூழலுக்கு ஏற்படுகின்ற

சேதங்கள், நீண்டகால அழிவுகளை தேசிய மட்டத்திலும், சர்வ்தேச மட்டத்திலும் அனுபவிக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

உலகில் இன்று காணப்படுகின்ற பெரும்பாலான மோதல்கள் இனத்துவம், மொழி, வரலாறு, உரிமைகள் போன்றவற்றால் ஏற்படுகின்றன. இவ்வாறான மோதல்கள் அரசக மோதல்கள் எனக் கருதப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை நீடித்த சமூக நெருக்கடிகளாக உருவெடுத்துள்ளன. எட்வட் அஸார் எடுத்தக்காட்டுவதற்கமைய நீடித்த சமூக மோதல்களில் பாதகமான விளைவுகள் தேசிய மட்டம் தொடக்கம் சர்வதேச மட்டம் வரை விரிவடைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் பின்னணிப் பகுதியில் தோன்றிய அரச மோதல்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் கெல்வி ஹொல்ஸ்ரி, இம்மோதல்களுள் பெரும்பாலானவை அரச நிருவாகம், நாடுகளின் பொறுப்புகள், நிலைமை போன்ற விடயங்களின் காரணமாகத் தோன்றுகின்றன எனக் குறிப்பிடுகின்றார். மனித உயிர்களைப் பறிக்கத்தக்க மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பாக கார்னிஜி ஆணைக்குழு (Carnegie Commission) எடுத்துக்காட்டுவதற்கு இணங்க இருபதாம் நூற்றாண்டில் நூறு மில்லியனுக்கும் மேற்பட்டோர் யுத்தங்கள் காரணமாக மரணித்துள்ளனர்.

## மோதலினால் ஏற்படும் நன்மைகள்

I மனித வரலாறானது முதன்மையாக வகுப்பு மோதல்களின் வரலாறாகும். இரண்டு முரண்பட்ட வர்க்கங்களின் மோதல்களின் விளைவாகவே **புதியதோர் வர்க்கம் தோற்றம்** பெற்றதென கால்மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

II சமூகத்தில் ஏற்படும் **பல்வேறு கருத்துக்கள், போட்டா போட்டி நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும்** ஒரு ஊடகமாக மோதல் செயற்படுகின்றது.

III மோதலானது **சமூக மாற்றங்களையும் புதுமைப்பாடுகளையும் இனங்காணத் துணையாக** அமையும்.

## மோதலினால் ஏற்படும் பாதகமான விளைவுகள்

I மோதல்களானது மனித **உயிர்களை அழிக்கத்தக்க நெருக்கடியாகவோ, ஆயுதமேந்திய அழிவுபூர்வமான** போராட்டமாகவோ அமையுமாயின் நிச்சயமாக அது சமூக முன்னேற்றத்திற்குப் பாதிப்பாக அமையும்.

II மோதலினால் **பௌதீக, உளரீதியான தாக்கங்கள் உயர்மட்டத்தில் காணப்படும்.**

## மோதல் தீர்த்தல் பற்றிய எண்ணக்கரு

மோதல்கள் மனிதனுக்கு அழிவை ஏற்படுத்துவதனால் அவ்வழிவுகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான உத்திகளை சமூக விஞ்ஞானிகள் முன்னெடுத்து வந்துள்ளனர். அதற்கமைய மோதல் தீர்வு சம்பந்தமாக சில முக்கியமான விடயங்களைக் கற்றறிந்து கொள்வது அவசியமாகும்.

## மோதல் தவிர்த்தல்

1950களின் பின்னர் மோதல் தீர்த்தல் என்னும் விடயம் முக்கியம் பெற்று வந்துள்ளது. மோதலினால் அழிவு ஏற்படுவதுடன், ஆயுதமேந்திய அழிவு தருகின்ற போராட்டமாக விருத்தியடைந்து செல்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் கையாளப்படுகின்ற ஒரு வழிமுறையாகும். இந்த மோதல் தவிர்ப்பானது மூன்று கட்டங்களில் மேற்கொள்ளலாம்.

I **மோதல் இல்லாத நிலைக்குக் கொண்டுவருவதாகும்.:** எதிர்காலத்தில் மோதல் தோன்றும் எனக்கருதி அதனைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். சுருக்கமாகக்கூறின் வன்முறை மோதல் ஏற்படத்தக்க சாத்தியங்களைத் தவிர்த்தலாகும்.

II தற்போது தோன்றியுள்ள மோதல் எதிர்காலத்தில் அழிவுபூர்வமான வன்முறையாக உருவெடுக்கும் எனக்கருதி அதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

III ஆயுதமேந்திய மோதல் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல். மீண்டும் அம்மோதல்கள் ஏற்படாதிருக்க முன்னாயத்தங்கள் செய்தல்.

## மோதல் இணக்கப்பாடு

மோதல் இணக்கப்படுத்தல் என்பது மோதல் தவிர்ப்பினையும் பார்க்க வேறுபட்ட ஒரு செயன்முறையாகும். இணக்கப்படுத்தலின் போது நிகழ்வது வன்முறை மோதலின் வன்முறைத் தன்மையைத்

தணித்தலாகும். வன்முறை மோதலின் உக்கிரத்தன்மையைக் குறைத்தல் அல்லது இழிவாக்குதல். Miyal உட்பட்ட குழுவினர் இதனை ஒப்பந்தம் மூலம் செய்யலாம் எனக் கூறுகின்றனர்.

eg: 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கை. (இலங்கை அரசாங்கத்திற்கும் ஆயுதமேற்திய குழுவிற்குமிடையில் இடம்பெற்றது.)

## மோதல் முகாமை

1980களின் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு செயன்முறையாக மோதல் முகாமையைக் குறிப்பிடலாம். மோதலுடன் தொடர்புடைய தரப்பினரிடையே உடன்பாடான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வன்முறைகளைத் தவிர்த்தல். வன்முறை மோதலை வரையறைப்படுத்துவதற்கும், மோதல் பரவுவதைத் தவிர்ப்பதற்கும் Mioyal குழுவினரால் முன்வைத்த சொற்பிரயோகமே **மோதல் முகாமைத்துவம்** ஆகும்.

மோதல் முகாமைத்துவத்தால் எதிர்பார்க்கப்படுவது உயிரோட்டமான மோதல் ஒன்றுடன் தொடர்புறும் பின்வரும் குறிக்கோள்களை உச்சளவில் அடைதல் **மோதல் முகாமைத்துவத்தின் நோக்கமாகும்.**

I மோதலின் வன்முறையும் அழிவு மட்டத்தையும் இழிவளவாக்குதல்.

II மோதலின் உக்கிரத்தன்மையையும் மக்களை அழிக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தும் நிலை பரவுவதைத் தடுத்தல்.

III வேறு திசைகளில் மோதல்கள் பரவுதலைத் தடுத்தல்.

இதற்கமைய மோதல் முகாமை என்பது இரண்டு துறைகளின் கீழ் வரைவிலக்கணப்படுத்தலாம்.

I. வன்முறை மோதலை ஒரு வரையறைக்கு கட்டுப்படுத்தி வைத்தல்.

II. மோதலுடன் தொடர்புடைய இரு தரப்பினரையும் ஓர் இடைத் தொழிற்பாட்டு மாதிரி ஒன்றின் பால் கொண்டுவருவதாகும்.

## மோதல் தீர்வு

மோதல் தீர்வு பற்றி பல அறிஞர்கள், கல்வியலாளர்கள், யுத்தத்துறை சிறப்பறிஞர்கள், இராஜதந்திரிகள், தாம் தொடர்புற்றிருக்கும் துறையில் மோதல் தீர்வு பற்றி வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

யுத்தத்துறை சிறப்பறிஞர்கள் மோதல் தீர்வு எனும் பதத்தை பயன்படுத்தியுள்ளனர். இது அச்சுறுத்துவதனூடாக வெற்றிகரமான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல் மூலம் அல்லது இராணுவ அதிகாரத்தை வெற்றிகரமாகப் பிரயோகித்தல் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருதல் அல்லது தவிர்த்தலைக் குறிக்கின்றது. இந்த இராணுவ அணுகுமுறையை பெரும்பாலான அறிஞர்கள் மறுதளித்துள்ளனர். காரணம் இது அழிவை ஏற்படுத்துகின்ற வன்முறைத் தன்மை வாய்ந்த ஒன்றாகும்.

மோதல் தீர்வு தொடர்பாக மேலும் சில கருத்துகளைக் குறிப்பிட்ட மற்றுமொரு பிரிவினர் மோதல் தீர்வு என்பது மோதல் ஆகிய சகல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு பரந்த செய்முறையெனக் குறிப்பிட்டனர்.

அகிம்சை முறையில் பிரச்சினைகளைத் தீர்த்து மோதலுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் தனித்துவமான பெறுமானங்களை இனங்கண்டு அவர்களது மானிடத் தேவைகளை இனங்கண்டு தேவைகளை நிறைவுசெய்தல் மோதல் தீர்வில் அடங்கியுள்ளது என்பது அவர்களது அபிப்பிராயமாகும்.

## மோதல் தீர்வு பல முக்கியமான இயல்புகளை உள்ளடக்கியுள்ளது.

I மோதலுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணிகளை வேரோடு களையச் செய்தல்.

II மோதல் தரப்பினரிடையே புதிய தொடர்புகளை உருவாகச் செயற்படுதல்.

III உடன்பாடான மனப்பாங்குகளை பிறப்பித்தல்.

IV வன்முறை மீண்டும் தலைதூக்குவதற்கான சாத்தியங்களை நீக்குதல்.

## மோதல் நிலைமாற்றம்

மோதல் நிலைமாற்றம் என்பது மோதல் தீர்வுக்கு அப்பால் செல்லும் படிமுறை மாற்றமாகும். இதனை மோதல் தீர்வின் ஒரு விருத்திநிலை எனக்கூறலாம். மோதலுடன் தொடர்புடைய இரு தரப்பினரிடையே காணப்படும் எதிர்ப்புத் தன்மையை தணித்து சகல தரப்பினரும் திருப்தி அடையக்கூடியவாறான ஓர் நிலையை ஏற்படுத்துவதாகும். மோதல் நிலை மாற்றத்தினூடாக இக் குறைபாட்டிற்கு பரிகாரம் காணப்படும்.

## மோதலை நிலைமாற்றத்தை மூன்று விதமாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

I ஒட்டுமொத்த சூழலமைவை மாற்றியமைத்தல்.

II மோதல் தரப்பினரின் தொடர்புகளை மாற்றியமைத்தல்.

III வலுவூட்டலுக்கூடாக மோதலுடன் தொடர்பான ஆட்களின் மட்டங்களை மாற்றியமைத்தல்.

இதற்கமைய மோதல் நிலைமாற்றத்தின்போது மோதலுடன் தொடர்புடைய சமூக அரசியல் மூலங்களின் பால் கவனம் செலுத்தவேண்டி ஏற்படும். மோதல் தொடர்பான உடன்பாடற்ற (-) வேறுபாடுகள் உடன்பாடான (+) வேறுபாடுகளாக மாற்றியமைக்கப்படல்.

பீட்டர் வொலன்ஸ்ரீன் என்பவரின் கருத்துப்படி, வெற்றிகரமான மோதல் நிலைமாற்றச் செயல் என்பது மோதல் தரப்பினருக்கு இடையே மோதலுக்கு ஏதுவாக உள்ள காரணங்கள் மற்றும் மோதலின் குறிக்கோள்களை மாற்றியமைத்தலாகும். அதனூடாக தரப்பினருக்கிடையிலான தொடர்புகள் மூலம் மோதலொன்று அல்லது யுத்தமொன்று உருவாகும் எனும் அச்சம் இனியும் ஏற்படமாட்டாது.

## சுருக்கமான விடை தருக

## பொதுத்துறை நிர்வாகம்

(1) பொது நிர்வாகம் என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் தருக?

(2) பொதுத்துறை நிர்வாகம் பற்றி வூட்றோ வில்சனின் கருத்தினைத் தருக?

(3) பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை அம்சங்களைத் தருக?

(4) பொதுத்துறை நிர்வாகத்தின் முக்கியத்துவத்தைத் தருக?

(5) அரசக் கொள்கை என்றால் என்ன?

(6) அரசகொள்கையின் பாட எல்லைகளைத் தருக?

(7) அரச கொள்கைக்கும், நிர்வாகத்துக்கும் இடையிலான தொடர்பினைத் தருக?

(8) அரச கொள்கை வகுத்தலில் பிரதான நிலைகளைத் தருக?

(9) அரச கொள்கை வகுத்தலில் ஈடுபடும் நிறுவனங்களைத் தருக?

(10) அரச கொள்கைகளை வகுப்பில் ஈடுபடுபவர்களைத் தருக?

(11) முகாமைத்துவம் என்றால் என்ன?

(12) முகாமைத்து மூலத்துவங்களை குறிப்பிடுக?

(13) முகாமைத்துவத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான தொடர்பினைத் தருக?

(14) லூதர் குலிக்கின் (Luthar gulick) POSDCORB என்பதனைச் சுருக்கமாக விளக்குக?

(15) சர்வதேச அரசியல் என்றால் என்ன?

(16) சர்வதேச அரசியலின் பாடப்பரப்பினைத் தருக?

(17) சர்வதேச அரசியலில் தேசிய அரசுகளின் பண்புகளைத் தருக?

(18) சர்வதேச அரசியலில் அரசல்லாத செயற்பாட்டாளர்கள் 2 குறிப்பிடுக?

(19) சர்வதேச அரசியலில் அரசசார்பு நிறுவனங்கள் 2 குறிப்பிடுக?

(20) சர்வதேச அரசியலில் அரசின் வெளிவாரியான நோக்கத்தினைத் தருக?

(21) வெளிநாட்டுக் கொள்கை என்றால் என்ன?

(22) வெளிநாட்டுக் கொள்கைகளை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?

(23) அரசுகளுக்கிடையில் போர் ஏற்படுவதற்கான காரணத்தைத் தருக?

(24) வலுச்சமநிலை என்றால் என்ன?

(25) தேசிய அதிகாரம் என்றால் என்ன?

(26) அரசுகள் தமது தேசிய அதிகாரத்தைப் பாதுகாக்க பயன்படுத்துகின்ற வழிமுறைகள் 2 தருக?

(27) அதிகாரச் சமநிலை என்றால் என்ன?

(28) அதிகாரச் சமநிலை ஏன் அவசியம்?

(29) அரசுகளுக்கிடையில் கூட்டுப்பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் 2 தருக?

(30) உலக அரசாங்கம் என்ற எண்ணக்கருவிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

## மோதல் மோதல் முகாமைத்துவம்

(31) மோதல் என்ற எண்ணக்கருவிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(32) மோதல் என்பதற்கான வரைவிலக்கணத்தைச் சுருக்கமாகத் தருக?

(33) ஜோன் கல்துங்கின் மோதல் முக்கோணியில் இடம்பெறும் 3 அம்சங்களையும் தருக?

(34) மோதல்களின் மூலங்களைத் தருக?

(35) மோதலின் இயல்பினைத் தருக?

(36) மோதலை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தருக?

(37) மோதலை எவ்வாறு வகைப்படுத்துவீர்?

(38) மோதலைத் தீர்த்தல் எண்ணக்கருவில் இடம்பெற்றுள்ள பிரதான அம்சங்களைத் தருக?

# ஆசிரியரின் வெளிவரவுள்ள நூல்கள்

1. இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி
(1092 – 1978 குடியரசு)

2. மாதிரி வினாவிடைப் பயிற்சி
(புதிய பாடத்திட்டம்)

**P.U.C Institute**
**Colombo - 06**
**T.P : 077 4940523**

# அடுத்த வெளியீடு

மாதிரி வினாவிடைப் பயிற்சி (புதிய பாடத்திட்டம்)

Printed by : Colombo Commerce Resource Center 27, Ramanathan Avenue,Dehiwala.
T.P : 077 4940523